
# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN




**கர்த்தர் வந்து உங்கள்மேல்
நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும்,
அவரைத் தேடக் காலமாயிருக்கிறது.**

ஓசியா 10:12


TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

September - October 2021
Volume : 61

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 5

# NLAG REVIVAL CENTER INAUGURATION - 2021




# மண்டல பெண்கள் முகாம், மதுராந்தகம் – 2021



ஆசிரியரிடமிருந்து........!



# கர்த்தரைத் தேடும் காலம்!

கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணு மட்டும் அவரைத் தேடக் காலமாயிறுக்கிறது (ஓசியா 10:12).

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

நாம் கர்த்தரை தீவிரமாக தேட வேண்டிய காலத்தில் இருக்கிறோம். ஆவிக்குரிய ஜீவியத்தில் உலர்ந்து, கனியற்று, பலனற்றுப் போன (ஓசியா 9:16;10:1) இஸ்ரவேல் ஜனங்களை பார்த்து ஓசியா தீர்க்கதரிசி கூறின வார்த்தையைத்தான் நாம் மேலே வாசித்தோம் (ஓசியா 10:12). இது கர்த்தரை தேடுகிற காலம். பல நேரங்களில் நாம் கர்த்தரை மறந்து, நம்முடைய வேலைகளில் மூழ்கிப்போய் விடுகிறோம். அவரை அசட்டை செய்து புறக்கணித்து விடுகிறோம். இதினிமித்தம் சாத்தான் மேற்கொள்கிறான். பாவ போராட்டங்களிலும் மற்றும் பலவித பிரச்சனைகளிலும் சிக்கித் தவிக்கிறோம். நம்முடைய தேவன் தம்மை தேடுகிற மக்களை எதிர்பார்க்கிறார். தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார் என்று வேதம் கூறுகிறது (சங்.53:2). தேவ ஜனமே, கர்த்தரைத் தேட உங்களை ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார், உயிரடையச் செய்வார்! எழுப்புதலைத் தருவார்!

## கர்த்தரைத் தேடுதல் என்றால் என்ன?

முதலாவதாக, கர்த்தரைத் தேடுதல் என்பது அவரோடு நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ளுதலாகும் (To have an intimate relationship with God). சங்கீதக்காரனாகிய தாவீது சங்கீதம் 63:1-ல் ‘தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே, உம்மைத் தேடுகிறேன்’ என்று கூறுகிறான். தாவீது, தேவனை தனிப்பட்ட விதத்தில் மிகவும் நெருக்கமாக அறிந்திருந்தான். ஆகவேதான் ’ நீர் என்னுடைய தேவன்’ என்று கூறுகிறான். ஒரு நபரைப் பற்றி அறிவதற்க்கும் ஒரு நபரை தனிப்பட்ட விதத்தில் அறிவதற்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. ஒரு நபரோடு அதிக நேரம் செலவழிக்கும் போது தான் அந்த நபரை நன்கு அறிய முடியும். தாவீதைப் போல தேவனோடு அதிக நேரம் தனித்து செலவிட ஒப்புக்கொடுங்கள்.

இரண்டாவதாக, கர்த்தரைத் தேடுதல் என்பது தேவனுக்குள் வளரவும் அவரை அறியவும் அதிகமாக வாஞ்சிப்பதாகும் (Desiring more of Him). ‘வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்தில் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிறுக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது’ என்று தாவீது கூறுகிறார் (சங்.63:1). தேவனை அறியவும் அவருக்குள் வளரவும் நமக்குள் இப்படிப்பட்ட தாகமும் வாஞ்சையும் உண்டாக

வேண்டும். தேவனை தேடுகிற மனிதனை, தேவனை தவிர வேறொன்றும் திருப்தி செய்ய முடியாது (சங்.63:5). தேவனோடு பல ஆண்டுகள் நடந்த போதும் தாவீதுக்கு தேவன் மேல் இருந்த தாகம் குறையவில்லை (சங்.42:1). இன்று நாம் தேவன் மேல் தாகமாயிருக்கிறோமா (மத்.5:6)? அவரை இன்னும் அறியவேண்டும் என்கிற தணியாத வாஞ்சை இருக்கிறதா (பிலி.3:10-12)?

மூன்றாவதாக, கர்த்தரைத் தேடுதல் என்பது தேவனை நம்முடைய வாழ்வின் அனைத்து பகுதிகளிலும் இணைத்துக் கொண்டு அவருடைய சித்தம் செய்ய அர்ப்பணித்தலாகும் (Integrating Him into every area of our life). தேவனை நம்முடைய வாழ்வின் எந்த பகுதியிலிருந்தும் பிரிக்கக்கூடாது. இன்று அநேகர் வாரத்தில் ஒருநாள் கர்த்தருக்கு, மற்ற நாட்கள் தங்கள் சொந்த வேலைக்கு என்று நினைக்கிறார்கள். சிலர் ஒவ்வொரு நாளும் சில நிமிடங்கள் கர்த்தருக்கு, மற்ற நேரங்கள் தங்களுக்கு என்று பிரித்து வாழ்கிறார்கள். தேவன், ஒரு சக்கரத்தின் ஆரையல்ல (Spokes), அனைத்தையும் இணைக்கும் குடையாக, மையமாக (Hub) இருக்க வேண்டும். அவர் நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். நம்முடைய படிப்பு, வேலை, பொருளாதாரம், செலவினங்கள், திருமண வாழ்வு, குடும்பம், ஊழியம் அனைத்திலும் தேவனை தொடர்புப்படுத்தி அவருடைய சித்தம் செய்ய அர்ப்பணிக்க வேண்டும். Secular (உலக சம்பந்தபட்டது), Spiritual (ஆவிக்குரியது) என்று பிரிக்காமல் வாழ்வின் அனைத்திலும் தேவனை முக்கியப்படுத்தி அவருக்கு பிரியமானதை செய்வது தான் தேவனை தேடுதலின் அடையாளமாகும்.

## கர்த்தரை எப்படி தேட வேண்டும்?

### ❖ நம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தி தேட வேண்டும்

நீங்கள் உங்கள் இருதயத்தை கர்த்தரை தேடுகிறதற்கு நேராக்குங்கள் அல்லது ஆயத்தப்படுத்துங்கள் என்று வேதம் கூறுகிறது (1 நாளா.22:19). ரெகொபெயாம் கர்த்தரைத் தேடுகிறதற்கு தன் இருதயத்தை நேராக்கவில்லை (2 நாளா.12:13,14) என்றும், யோசபாத், எசேக்கியா போன்றவர்கள் கர்த்தரை தேடுகிறதற்கு தங்கள் இருதயங்களை நேராக்கி ஆயத்தப்படுத்தியிருந்தார்கள் என்றும் வேதம் கூறுகிறது (2 நாளா.19:3; 30:19; எஸ்றா 6:21;7:10). ஆம் அருமையானவர்களே, நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டு, அகற்றி போட்டு, சுத்த இருதயத்தோடும், நொருங்குண்ட இருதயத்தோடும் கர்த்தரைத் தேட வேண்டும் (சங்.34:18; 51:17). அதுவே இருதயத்தை ஆயத்தப்படுத்துதலாகும். தரிசு நிலம் போல இருக்கும் நம் இருதயங்களை பண்படுத்துவோம் (ஓசியா 10:12; எரேமியா 4:3). உபவாசத்தோடும் அழுகையோடும் கர்த்தரிடத்தில் திரும்புவோம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். பின்மாரியை வருஷிக்கப்பண்ணுவார் (யோவேல் 2:12,21,23).

### ❖ முழு இருதயத்தோடும் ஆத்துமாவோடும் தேட வேண்டும்

நாம் முழு இருதயத்தோடும் கர்த்தரை தேட வேண்டும் (உபாகமம் 4:29; எரேமியா 29:13). ராஜாவாகிய ஆசாவின் நாட்களிலே கர்த்தரை தேடுவதில் பெரிய எழுப்புதல் உண்டானது. கர்த்தரைத் தங்கள் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் தேடும்படி ஜனங்கள் தீர்மானித்தார்கள் (2 நாளா.15:12). கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டார் (2நாளா.15:4). தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணினார் (2 நாளா. 16:9).

❖ **எழுப்புதலை நாம் காணுமட்டும் தேட வேண்டும்**

கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும் அவரைத் தேட காலமாயிருக்கிறது என்று ஓசியா தீர்க்கதரிசி நம்மைத் தட்டி எழுப்புகிறார் (ஓசியா 10:12). கர்த்தரை தேடுவதில் நமக்கு ஒரு உறுதி வேண்டும், தேவன் நம்மில் ஒரு எழுப்புதல் தரும்மட்டும், நம்முடைய குடும்பங்கள் இரட்சிக்கப்படும் மட்டும், நம்முடைய திருச்சபைகள் உயிர்மீட்சி அடையும் மட்டும், நம்முடைய தேசம் மறுரூபமாகுமட்டும் கர்த்தரை ஜெபத்தில் தேடுவோம். இந்த தேசத்தின் கடைசி ஆத்துமா இரட்சிக்கப்படுகிறவரையிலும் நாம் சோர்ந்து போகாமல், உறுதியுடனும் ஊக்கத்துடனும் கர்த்தரின் முகத்தைத் தேடுவோம்!

## கர்த்தரைத் தேடும்போது வரும் ஆசீர்வாதங்கள்

கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு எண்ணற்ற ஆசீர்வாதங்கள் வேதத்தில் வாக்களிக்கப்பட்டிருக்கின்றன. நாம் கர்த்தரைத் தேடும்போது அவர் நமக்கு வெளிப்படுவார் (2 நாளா.15:2). கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் வாழும் (சங்.69:32). கர்த்தரைத் தேடுகிறவர்கள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்கள் (சங்.70:4;105:3). கர்த்தரைத் தேடுகிறவர்களை அவர் கைவிடுகிறதில்லை (சங்.9:10), கர்த்தரைத் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள் (சங்.119:2). அவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது (சங்.34:10). கர்த்தரை உண்மையாய்த் தேடுகிறவர்களுக்கு அவர் பலன் அளிக்கிறார் (எபி.11:6). அவர்கள் மேல் தம்முடைய கரத்தை நன்மையாக வைக்கிறார் (எஸ்றா 8:22). அவர்கள் மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுகிறார் (ஓசியா 10:12) என்று ஏராளமான ஆசீர்வாதங்களை நாம் காண்கிறோம். ஆகவே கர்த்தருடைய முகத்தைத் தேட இன்றைக்கு தீர்மானம் செய்யுங்கள்.அதற்காக உங்களை அர்ப்பணியுங்கள். கர்த்தர் உங்களிலும் உங்கள் மூலமாகவும் பெரிய காரியங்களைச் செய்வார்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி

---

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## 15. எல்லா ஊழியங்களும் சபையின் மூலமே நடைபெற்றன

தொடர்ச்சி

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அதரிசன சபை உலகமெல்லாம் பரவி வருகிறது. தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் யாவரும் சபைப் பாகுபாடின்றி இந்த அதரிசன சபையில் அங்கமாக இருக்கின்றனர். ஆங்காங்கே ஸ்தல சபைகள் இயங்கி வருகின்றன. இயேசு கிறிஸ்து இந்த கல்லின் மேல் என் சபையை கட்டுவேன் என்று வாக்குப்பண்ணினார். காணக்கூடிய அளவில் ஆங்காங்கே செயல்படும் விசுவாசிகளின் கூட்டமாகிய சபைகள் எல்லாம் அகில உலக அதரிசன சபையின் பகுதிகளே.

திருச்சபைக்குத் தேவன் தந்துள்ள ஆவிக்குரிய தலைமைத்துவ ஊழியங்கள் ஐந்து. அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், மேய்ப்பர், சுவிசேஷகர், போதகர். இந்த ஊழியங்களெல்லாம் திருச்சபையின் வளர்ச்சிக்காக செயல்படும்படி கொடுக்கப் பட்டுள்ள தலைமைத்துவ வரங்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஆங்காங்கே நடைபெறும் சபைகளோடு இணைந்து செயல்பட அழைக்கப்பட்டுள்ளார்கள். சபையை பக்திவிருத்தியடைய செய்வதும், பரிசுத்தவான்கள் பயிற்சி கொடுப்பதும் நற்செய்தி அறிவிப்பதும் மேற்கூறிய ஐந்து ஊழிய வரமுடையவர்கள் செய்ய வேண்டிய ஊழியங்கள்.

### அன்று

எருசலேமில் அப்போஸ்தலர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஆதி சபை மேலே கூறப்பட்ட ஐந்து ஊழியங்களையும் பெற்று எல்லா நிலையிலும் வளர்ந்து பெருகிற்று. யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் நற்செய்தி அறிவிக்கப்பட்டு சபைகள் வளர்ந்தன.

பிலிப்பு சமாரியாவில் நற்செய்தி அறிவித்து சபையை நிறுவினார். அற்புத அடையாளங்கள் மூலம் தேவ வசனம் உறுதிப்படுத்தப்பட்டது. சமாரியாவில் பெரிய எழுப்புதல் உண்டானது. உடனே அப்போஸ்தலர் பேதுருவையும், யோவானையும் அனுப்பி சமாரிய சபை மேற்கொண்டு வளர ஆவன செய்தனர். இப்படி ஒவ்வொரு பட்டணங்களிலும் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டது. ஆவிக்குரிய தலைவர்களின் கீழ் இவை இயங்கி வந்தன. எந்த ஊழியத்தைச் செய்தாலும் அது சபை நிறுவுதலில் நிறைவு பெற்றது. அந்தியோகியாவில் ஆரம்பிக்கப்பட்டு அது பெரிய மிஷனரி சபையாக வளர்ந்தது.

பவுலும், பர்னபாவும் பின்பு சீலாவும், தீமோத்தேயுவும், தீத்துவும் குழுக்களாகச் சென்று உலகமெல்லாம் நற்செய்தி அறிவித்து சபைகளை நிறுவினார்கள். சபைகளை நிறுவினதின் அறிக்கைகளை அந்தியோகியா சபையிலும், எருசலேம் சபையிலும் சாட்சிகளை பகிர்ந்தனர். அப்போஸ்தலரும், தீர்க்கதரிசிகளும், சுவிசேஷகர்களும், சபைகளை நிறுவவும் அந்த சபைகள்

வளரவும் பாடுபட்டனர். எல்லா ஊழியங்களும், வரங்களும், ஸ்தல சபையை மையமாகக் கொண்டு ஸ்தல சபைகள் வளர செயல்பட்டன. ஒருவரும் சுயாதீனமாக செயல்படவில்லை. பவுல் தனக்கென்று ஒன்றை ஆரம்பிக்கவில்லை. பேதுரு, யோவான் தங்களுக்கென்று ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவில்லை.

## இன்று – சுவிசேஷகர்களின் ஊழியம்

இன்றுள்ள சுவிசேஷகர்களில் பலர் எந்த சபையோடும் சம்பந்தப்படாமல் பொது இடங்களில் கூட்டங்களை நடத்தி விலாசங்களைப் பெற்று பத்திரிக்கைகளை அனுப்பி, தங்களுக்கு ஆதரவாளர்களாக ஆட்களைச் சேர்த்துக் கொள்ளுகின்றனர். இவர்கள் நற்செய்திக் கூட்டங்கள் நடத்தும் ஊரிலுள்ள சபைகள் வளர வேண்டும் என்ற நோக்கமில்லாமல் தங்களுக்கு பண உதவி செய்யும் பங்காளர்களை சேகரிப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

தாங்கள் எந்த சபையையும் சாராதவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கின்றனர். சபைப் பிரிவுகளெல்லாம் ஏதோ தவறான நிலையிலுள்ளது போலவும் எந்த சபையையும் சாராதது நல்ல நிலை போலவும் இவர்கள் தங்களை வெளிப்படுத்துகிறார்கள். எந்த சபையையும் சாராத ஒரு சுயாதீனர் எவ்வளவு பரிசுத்தவானாக இருந்தாலும் அவர் ஓர் முன்மாதிரியான ஊழியர் அல்ல, இவரைப் போலவே இவருடைய கூட்டங்களில் இரட்சிக்கப்படுகிறவர்களும் ஒரு சபையையும் சாராதவர்களாக மாறினால், எங்கே போய் ஞானஸ்நானம் எடுப்பார்கள். பரிசுத்த ஆவியைப் பெறுவார்கள், கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்வார்கள், யார் திருமணம் செய்து வைப்பார்கள், மரித்தால் எந்த சபை அடக்கம் பண்ணும்? இதை யோசித்துப் பார்த்தால் இப்படிப்பட்ட சுயாதீனர்களின் ஊழியத்தை யாரும் மெச்சிக் கொள்ளமாட்டார்கள். எந்த சபையையும் சாராதவர்கள் என்று சொல்லி எல்லா சபைகளையும் சார்ந்த மக்களைச் சார்ந்திருக்கிறார்கள். இவர்கள் ஒரு சபையை சாராமலிருப்பதால் தங்களுடைய ராஜ்யத்தைக் கட்டி எழுப்புகிறார்கள் என்று பொருள். இது பரிசுத்த வேதத்திற்குப் புறம்பான செயல்.

## தீர்க்கதரிசன ஊழியம்

தீர்க்கதரிசிகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் அநேகரும் தீர்க்கதரிசன ஊழியத்தை ஓர் ஆதாயத் தொழிலாக பயன்படுத்துவதை கண்கூடாகக் காண்கிறோம். தீர்க்கதரிசனத்தின் மூலம் சபை உணர்த்துவிக்கப்பட்டு, பக்திவிருத்தியடைந்து, ஆறுதலும், சமாதானமும் பெற வேண்டும். இதன் மூலம் ஸ்தல சபைகள் பரிசுத்தமடைந்து ஆவிக்குரிய நிலையில் முன்னேறும். ஆனால் இந்த தீர்க்கதரிசிகளுக்கு அந்த நோக்கமில்லை.

## பலர் சுயாதீனமாய் செயல்பட கூறும் காரணங்கள்

உலகில் எத்தனையோ சபைப் பிரிவுகள் உள்ளன. இவை குறையற்றவையல்ல. ஆனால் ஒரு தேவனுடைய ஊழியத்தைச் செய்கின்ற ஒருவர் ஒரு சபையும் சரியில்லை என்ற மனப்பான்மையோடு சுயாதீனமாக செயல்பட்டால் நாளாவட்டத்தில் அவரே ஒரு ஸ்தாபனமாக மாறுகிறார். எல்லா சபையாருடனும் ஐக்கியமாயிருக்க இதுதான் சிறந்த வழி என்று எண்ணுவது தவறு. ஊரிலுள்ள எல்லாருடனும் ஐக்கியமாயிருக்க விரும்புகிறேன். எனவே நான் ஒரு குடும்பத்திலும் அங்கமாயிருக்க விரும்பவில்லை என்று பண்டாரமாக அலைந்தால் அவனை யாரும் மதிக்கமாட்டார்கள். இன்று ஆவிக்குரிய வரங்களும், ஊழியங்களும் பணம் சேர்க்கும் நோக்கத்திலும், தங்களுக்கென்று ஒரு ராஜ்யத்தைக் கட்டும் நோக்கத்திலும் செயல்படுகின்றன. உலகமெல்லாம் இந்த சுயாதீன ஆவி பரவியுள்ளது. இந்த நிலை வேத வசனங்களுக்கு முரண்பட்டது.

எந்த ஒரு தேவ ஊழியரும் எது ஓரளவு சரியான உபதேசமும், நிர்வாகமுமுள்ள கிறிஸ்தவ ஸ்தாபனமென்று அறிந்து, அதில் இணைந்து தன் ஊழியத்தை நிறைவேற்றுவதுதான் வசனம் அங்கீகரிக்கும் ஊழியம். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் அங்கம் வகிக்கும் ஸ்தாபனத்திற்கு கட்டுப்பட்டு நடப்பார்கள். இவர்கள் தவறு செய்தால் தட்டிக் கேட்க ஆட்கள் இருப்பார்கள். இதைவிட்டுவிட்டு ஜமீன்தாரர்கள் போல செயல்படுவது முறையாகாது. வரங்களைப் பயன்படுத்தி வியாபாரம் செய்யக்கூடாது.

தேவன் ஒருவரை ஆவிக்குரிய வரங்களில் எவ்வளவு வல்லமையாய் பயன்படுத்தினாலும் அவருடைய ஊழியம் அங்கேயுள்ள சபை வளர்ச்சிக்கு உதவாவிட்டால் அது வெறும் ஆதாயத் தொழிலாகவே கருதப்படும். இது கசப்பானதாகத் தெரியும். ஆம், இது ஓர் கசப்பான உண்மை. தேவன் வல்லமையாய்ப் பயன்படுத்தும் அநேகரை உற்று நோக்குங்கள். அவர்கள் தங்கள் ராஜ்யத்தைக் கட்டி முடித்து தங்கள் சொந்த குடும்ப அங்கத்தினர்கள் கையில் அந்த ஊழியத்தை விட்டுச் செல்வார்கள். ஆனால் தேவன் பயன்படுத்திய அந்த தேவ மனுஷன் போல் அவர் சந்ததி இல்லாவிட்டாலும் ஓர் கூட்டம் அவர் பின்னே செல்லும். தேவ ராஜ்ய வளர்ச்சிக்கு உதவாமல் தங்கள் ராஜ்யம் வளர இது உதவியாயிருக்கும்.

- தொடரும்

## *The ABC of Godliness*

Acknowledge Him. Be kind. Call to God. Do good.
Encourage one another. Forgive. Give generously.
Humble yourselves. Invite the poor. Judge not.
Keep your self pure. Love your neighbour.
Mind your own business. Never forget His precepts. Obey God.
Pray continually. Quench not the Spirit. Rejoice.
Sing praises. Trust Him. Understand the Lord's will.
Visit the fatherless. Walk humbly with God.
EXamine your ways. Yield to Him. Zip your mouth.

A-Proverbs 3:6; B-Ephesians 4:32; C-Psalm 55:16; D-Luke 6:27; E-Hebrews 3:28; F-Ephesians 4:32; G-Romans 12:8; H-1 Peter 5:6; I-Luke 14:13; J-Matthew 7:1; K-1 Timothy 5:22; L-Matthew 19:19; M-1 Thessalonians 4:11; N-Psalm 119:93; O-Acts 5:29; P-1 Thessalonians 5:17; Q-Hebrews 11:34;R-Psalm 118:24; S-Psalm 47:6; T-Psalm 3:5; U-Ephesians 5:17; V-James 1:27; W-Micah 6:8; X-Lamentations 3:40; Y-Romans 6:13; Z-Psalm 39:1



# நீங்களும் பைபிளை வாசிக்கலாம்

## You too can read the Bible

**Rev. Dr. L. ஜெயபாலன்**
மண்டல தலைமைப் போதகர், திண்டுக்கல் மண்டலம்

### இன்று நீங்கள் பைபிளை வாசித்தீர்களா?

குடியானவர் ஒருவர் தனது இடத்திலே வைக்கோல் போரில் வேலை செய்து கொண்டிருந்தார். அவரது மகனும் அருகில் நின்று கொண்டு, தனது தகப்பனார் கடினமாக உழைப்பதை பார்க்கையில், அவ்வழியாக மந்திரி ஒருவர் தனது குதிரைவண்டியில் கெம்பீரமாக சென்று கொண்டிருந்தார். தகப்பன் தனது மகனைப் பார்த்து, "என் மகனே அவர் அமெரிக்க தேர்தலில் வெற்றி பெற்று மந்திரி சபைக்குச் செல்கிறார். அவருக்கு நல்ல சம்பளம். எனக்கு படிப்பு இல்லாததால் இங்கு கடினமாக உழைக்கிறேன். அவரைப் போல நானும் படித்திருந்தால் அவரைப்போல இருந்திருப்பேன். எனக்கு அந்த வாய்ப்பு இல்லை".

''மகனே உனது மூத்த சகோதரர்களை என்னால் படிக்க வைக்க முடியவில்லை. நீ உனக்குள்ளே இருக்கின்ற தருணங்களை உபயோகப் படுத்திக்கொள்" என்றாராம். கடவுள் மேல் பக்தியுள்ள அந்த மனிதரின் மகன் பிற்காலத்தில், வக்கீலாகவும், காங்கிரஸ் சபையின் மந்திரியாகவும் அமெரிக்காவில் இருந்தார். இந்த சிறிய மகன் பெயர் டானியேல் வெஃப்ஸ்டர். அவர் எழுதின ஆங்கில அகராதி மிகவும் பிரபலமானது. டானியேல் சிறந்த பேச்சாளர், அரசியல் சாசனத்தின் பாதுகாவலன் என அழைக்கப்பட்டார்.

உங்கள் மனதை அதிகமாக ஆட்கொண்ட மிக முக்கியமான கருத்து என்ன? என்று ஒருவர் கேட்டபொழுது, "எனக்கும், எனது தேவனுக்கும் உள்ள தனிப்பட்ட கடமை" என்றாராம். இவர் வேதாகமத்தை நேசித்தவர், வாசித்தவர், தேவனை பின்பற்றினவர். அவர் பைபிளைக் குறித்து கூறுகையில், "நான் இந்த நிலைமைக்கு பேச்சாளராக, வக்கீலாக, அரசியல்வாதியாக வருவதற்கு காரணம் என் பெற்றோர்கள். எனது சிறுவயதிலே வேதாகமத்தை படிக்க, நேசிக்க உதவினார்கள்".

"வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளை நாம் பின்பற்றினால், நமது அமெரிக்க தேசம் செழிப்புடன் முன்னேறிச் செல்லும். நாமும், நமக்கு பின் வருபவர்களும் வேதாகமத்தின் அறிவுரைகளை அதிகாரத்தை பின்பற்ற தவறினால், திடீரென வரும் அழிவு, நமது மேன்மையை புதைத்து நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி விடும்" என்றார்.

ஆம் வேதாகமம், கடவுள் நமக்கு கொடுத்த விலை மதிக்க முடியாத ஒரு பெரிய பொக்கிஷம். அதை தினமும் வாசிப்பது மட்டுமல்ல, அதிலுள்ள விலையேறப்பெற்ற கருத்துக்களை சுரங்கத்தில் தங்கத்தை எடுப்பது போன்று எடுக்க வேண்டும். (கடந்த இதழின் தொடர்ச்சியை கீழே காணலாம்).

### 5. Study the context of the passage :

குறிப்பிட்ட வசனத்தின் முன்னே, பின்னே வருகின்ற வசனங்களை வாசித்தறிதல். ஒரு குறிப்பிட்ட வசனம், பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாட்டில் எவ்வித உறவை உடையது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

## 6. Look at the Literary background
### எழுத்தாளரின் (ஆசிரியர்) பின்னணியை அறிதல்

இதை எழுதியவர் யார். அவர் எழுதியதற்கு ஆதாரங்கள் இருக்கிறதா? (உம்) ரோமர் 1:1-2 பவுல்... அனைவருக்கும்... எழுதுகிறதாவது.1 பேதுரு 1:1-2, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு.. எழுதுகிறதாவது. கலா.1:1-2 பவுலாகிய நானும்... சபைகளுக்கு எழுதுகிறதாவது தாவீதின்... சங்கீதம் -23.

## 7. Look at the historical background
### வரலாற்றுப் பின்னணியை ஆராய்தல்

ஒரு குறிப்பிட்ட சம்பவம் அல்லது புத்தகம் எழுதப்பட்ட காலத்தை குறிக்க சான்று உள்ளதா? வரலாற்றுச் சம்பவங்கள், பழக்கவழக்கங்கள், இவைகளுக்கு வசன சான்றுகள் உள்ளனவா? என்பதை அறிதல். எஸ்தர் 1:1-2 இந்து தேச முதல்... இராஜாவாகிய... ஆகாஸ்வேரு... யோபு1:1-5... ஊத்ஸ் தேசத்திலே... யோபு என்னப்பட்ட எரேமியா 1:1-3 பென்யமீன் தேசத்திலுள்ள... மத்தேயு, மாற்கு, லூக்கா போன்றவை கி.பி.70க்கு முன் எழுதப்பட்டது. எருசலேம் வீழ்ச்சி குறிப்பிடப் படவில்லை.

## 8. Look at the history of interpretation
### காலா காலங்களிலே வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட பகுதியை குறித்த கருத்துக்களை அறிதல்

சபைப் பிதாக்கள் மத்திய காலத்தில் வாழ்ந்தவர்கள். சீர்த்திருத்தக் காலம், மறுமலர்ச்சி காலம், யூத வியாக்கியானம் (ஜோசிபஸ் என்ற யூத வரலாற்று ஆசிரியர் கூறுபவை). ரோமன் கத்தோலிக்க சபையின் கருத்து, நவீன கால கருத்துக்களை அறிதல்.

**உதாரணம் : திருவிருந்து (இராப்போஜனம் – புது நன்மை)**

அப்பம், திராட்சரசம். கத்தோலிக்க சபை : இயேசுவின் சரீரமாக இருக்கிறது என்ற நம்பிக்கை. லூத்தரன் சபை (மார்ட்டின் லூத்தர்) இயேசுவின் பிரசன்னம் சீர்த்திருத்த சபைகள் : இயேசுவின், சரீரம் இரத்தத்தை நினைவுகூறும்படி...

**ஞானஸ்நானம் (திருமுழுக்கு)**

தெளிப்பு ஞானஸ்நானம் எகிப்திலுள்ள பூசாரி, புதிதாக பிறந்த குழந்தையை தன் கையில் ஏந்தி, சூரியனுக்கு முன், நீர் தெளித்து, பிள்ளையை வியாதியிலிருந்து காப்பாற்றும்படி பிரார்த்தனை செய்வானாம்.

## 9. Write your interpretation
### உங்களுடைய வியாக்கியானத்தை எழுதுங்கள்

பரமப் பிதாவின் உதவியை நாடுங்கள். பரிசுத்தாவியானவரை சார்ந்திருங்கள். உங்கள் ஞானத்தை உபயோகியுங்கள்.

## 10. Write your thoughts for this day
### இந்த காலத்திற்கு உங்களது கருத்தை எழுதவும்

இவை வேத வசனத்தின் அடிப்படையில் பரிசுத்தாவியானவரின் உதவியுடன், உங்களது தனிப்பட்ட அனுபவ ரீதியில் எழுதலாம்.

போலந்து தேசத்தில் இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பதாக கிழக்குப் பகுதியில் வசித்த கிராமவாசியின் வீட்டை சந்தித்த ஆவிக்குரிய நூல்களை விநியோகிப்பவர். ஒரு வேதாகமத்தை அவருக்குக் கொடுத்தார். அதை வாசித்த அந்த

மனிதர், பரிசுத்தாவியானவரால் தொடப்பட்டு, இயேசு கிறிஸ்துவை உள்ளத்தால் ஏற்றுக்கொண்டார். பிறகு பைபிளை பிறருக்கும் வாசிக்கும்படி கொடுத்தார். அந்த ஒரு வேதாகமம் மூலம் 200 பேர்கள் விசுவாசிகளாகி கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர்.

1940-ல் புத்தகங்களை விநியோகித்த மைக்கேல் என்பவர், அந்த ஊருக்கு மறுபடியும் வருகை தந்தார். அவருடைய பிரசங்கத்தைக் கேட்க ஒரு குழுவினர் ஒன்று கூடினர். அக்கூடுகையில் சாட்சி கூறுவதற்குப் பதிலாக ஒவ்வொருவரும் வேத வசனங்களை மனப்பாடமாக சொல்ல சொன்னார். அங்கு ஒருவர் எழுந்து நின்று "ஒரு வசனத்தை ஒவ்வொருவரும் சொல்லவா? அல்லது அதிகாரங்களையா?" என கேட்டார்.

ஆச்சரியத்தில் ஆழ்ந்து போன மைக்கேல், பைபிள் அதிகாரங்களிலே மனப்பாடமாக சொல்கிறவர்கள் இங்கு இருக்கின்றனரா? என்றார். அதிசயமான காரியம் என்னவெனில் அதிகாரங்களையும், பைபிளிலுள்ள புத்தகங்களையும் மனப்பாடமாக சொல்லக்கூடியவர்கள் இருந்தனர். 13 பேர்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, ஆதியாகமத்தில் 25 அதிகாரங்களை சொல்கிறவர்களாக இருந்தனர். ஒருவர் சங்கீதம் முழுவதையும் சொல்லக்கூடியவராக இருந்தார். 200 பேர்கள் முழு வேதாகமத்தையும் மனப்பாடம் செய்திருந்தனர்.

கிராமத்திலுள்ள ஒருவருக்கு கிடைத்த பைபிளை பலரும் வாசித்து, ஞாயிற்றுக்கிழமை ஆராதிக்க ஒன்று கூடினர். அந்த பைபிள் பலர் கையிலும் இருந்ததால் அதன் பக்கங்கள் கிழிந்து, மிகவும் பழமையானதாகவும் காணப்பட்டது. என்ன விந்தையிலும் விந்தை! பரிசுத்தாவியின் அபிஷேகம், குடும்ப ஆலோசனைகளுக்கு 94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

---

**THERE ARE 3 TYPES OF PEOPLE IN THE WORLD:**

- PEOPLE WHO ***MAKE*** THINGS HAPPEN
- PEOPLE WHO ***WATCH*** THINGS HAPPEN
- PEOPLE WHO ***WONDER*** WHAT HAPPENED


**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது
**Tamil District Council of SIAG** என்று எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.
பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**
**30, நாவலர் நகர், மதுரை - 625 016. போன் : 0452 2301165.**



# எண்ணாகமம் : Numbers

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

வேதாகமத்தின் நான்காவது புத்தகம் எண்ணாகமம். சுவாரசியமான பல சம்பவங்கள் இப்புத்தகத்தில் காணப்படுகின்றன. எண்ணாகமத்தை தெளிவுற விளங்கிக் கொள்ள ஆதியாகமத்திலிருந்தே இஸ்ரவேல் ஜனங்களின் பின்னணியத்தை கவனித்துப் பார்ப்பது அவசியம்.

இஸ்ரவேலர் என்று அறியப்படும் ஜனங்களின் முற்பிதாக்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களே. யாக்கோபு என்ற மனிதன் 'இஸ்ரவேல்' என்று பெயர் மாற்றம் பெற்றான். அவனது பிள்ளைகளும், சந்ததியினரும் 'இஸ்ரவேலர்' என அறியப்படுகின்றனர். இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பு, கானான் தேசத்தில் குடியிருந்த தன் தகப்பனாகிய யாக்கோபும் (இஸ்ரவேல்) அவன் பிள்ளைகள் அனைவரும் பஞ்சகாலத்தில் பராமரிக்கப்படும்படி எகிப்துக்கு வரும்படி அழைத்தான். எகிப்தில் குடியேறிய அவர்கள், சுமார் 430 வருடங்கள் அங்கேயே இருந்துவிட்டனர். யோசேப்பின் காலத்துக்குப்பின் அரசியல் மாற்றங்களில், இவர்கள் அங்கு அடிமைகளாகவும் மாற்றப்பட்டுவிட்டனர்.

**யாத்திராகமத்தில்,** திரள்கூட்டமாய் பெருகிவிட்ட இஸ்ரவேலரை மீட்டு, மீண்டும் கானான் தேசத்துக்குக் கொண்டுவர தேவன் வாக்குப்பண்ணினார். எனவே கானான் வாக்குத்தத்த தேசமாய் சித்தரிக்கப்படுகிறது. அதற்கென மோசே இரட்சகனாய் ஆயத்தம் பண்ணப்பட்டான். பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து மோசே அவர்களை விடுவித்து கானானுக்கு நேராய் பிரயாணப்படுத்தினான். சீனாய் வனாந்திரத்தில் வந்து அங்கே ஒரு வருடகாலம் சீனாய்மலையின் அடிவாரத்தில் தங்கியிருந்தனர். அங்கே தேவன் அவர்களுடன் தமது உடன்படிக்கையை ஏற்படுத்தினார். நான் உங்களை எகிப்தியர் நடுவிலிருந்தும் அவர்களின் தெய்வங்களின் பிடியிலிருந்தும் மீட்டுக் கொண்டேன். எனவே நீங்கள் எனக்கு ஜனங்களாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன் என்பதே இந்த உடன்படிக்கையின் சரத்து.

சீனாய்மலையின் அடிவாரத்தில் அவர்கள் இன்னும் இருக்கையில், அவர்கள் தமது மக்களாயிருக்கும்படிக் கைக்கொண்டு நடக்கவேண்டிய பிரமாணங்கள் அனைத்தையும் **லேவியராகமத்தில்** கர்த்தர் தந்தார்.

சீனாய்மலையின் அடியிலிருந்து பயணப்பட்டு, **பாரான் வனாந்தரத்திலுள்ள காதேஸ் பர்னேயா** வழியாக, கானானுக்கு சமீபமாயிருந்த மோவாபின் சமவெளி வரைக்கும் இஸ்ரவேலர் பயணம் செய்த விபரங்களை எண்ணாகமம், நமக்குத் தருகிறது. அங்கிருந்து யோர்தானைக் கடந்தால் வாக்குத்தத்த தேசமாகிய கானான் சென்றடையலாம். சாதாரணமாக இரண்டுவார காலத்தில் பயணிக்கக்கூடிய தூரம்தான் இது.

யாத்திராகமமும் லேவியராகமமும் சொல்லும் சரித்திரத்தின் தொடர்ச்சியையே எண்ணாகமம் நமக்குத் தருகிறது. மேலும்,

தேசமாக உருவாகிவிட்ட **இஸ்ரவேலரைக்** குறித்தும், அவர்களை நடத்தின **கர்த்தரைக்** குறித்தும், கர்த்தர் சார்பில் நின்று இஸ்ரவேலருக்கு ஊழியம் செய்த

**லேவியரைக்** குறித்தும் எண்ணாகமம் தெளிவாகச் சொல்லுகிறது.
எண்ணாகமத்தை மூன்று பிரிவுகளாகப் பகுத்துப் படிக்கலாம்.
I. சீனாய்மலை அடிவாரத்தில் இஸ்ரவேலர் (எண். 1-10).
II. வனாந்தரத்தில் இஸ்ரவேலர் (எண். 11-21).
III. மோவாபின் சமவெளிகளில் இஸ்ரவேலர் (எண். 22-36).
இம்மூன்று பிரிவுகளின் விபரங்களிலுள்ள முக்கியமானவற்றைப் பார்க்கலாம்.

## I. சீனாய்மலை அடிவாரத்தில் இஸ்ரவேலர்: (எண். 1:1 - 10:10)

இஸ்ரவேலர் சீனாய்மலை அடிவாரத்திலிருந்து பயணப்படுவதற்கு முன்பு, இருபது வயதுள்ளவர்கள்முதல் யுத்தத்துக்குப் போகத் தகுதியுள்ள ஆண்மக்கள் அனைவரையும் (காலாட்கள்) எண்ணித் தொகையிடும்படி தேவன் மோசேக்குச் சொன்னார் (1:2,3). மக்கள் எண்ணப்பட்டதால் இப்புத்தகம் **"எண்ணாகமம்"** என்று பெயர் பெற்றது.

அப்படியே, ஆறுலட்சத்து, மூவாயிரத்து, ஐநூற்று ஐம்பது (6,03,550) யுத்தபுருஷர் எண்ணித் தொகையிடப்பட்டனர், இருபது வயதுக்கு கீழுள்ள சிறுவர்களும், அத்துடன் முதியோரும், பெண்களும் எண்ணப்படவில்லை. (லேவியரும் மற்றவர்களுடனே எண்ணப்படவில்லை). எனவே, அன்று பிரயாணப்பட்ட இஸ்ரவேலரின் தொகை இருபத்தைந்து லட்சத்திற்கும் (25,00,000) அதிகமாகும். இவர்கள் ஒரு இடத்தில் சென்று பாளயமிறங்கினால் குறைந்தது 40 சதுர கி.மீ. பரப்பளவில் முகாமிடுவர். உலகிலுள்ள மிகப்பெரிய பாளயம் இதுவேயாகும்.

சீனாய்மலை அடிவாரத்தை விட்டுப் புறப்பட இன்னும் பத்தொன்பது நாட்கள் இருக்கையில், பாளயமிறங்கும் ஒழுங்குகள், லேவியரின் பணி, பாளயத்தில் தீட்டு இல்லாமல் வாழ ஒழுங்குவிதிகள், நசரேய விரதம், தலைவர்கள் கர்த்தருக்குத் தரவேண்டிய காணிக்கைகள், ஆசரிப்புக் கூடாரத்தின் விளக்குகள், பஸ்கா, வெள்ளிப்பூரிகைகள் பற்றிய விபரங்கள் ஆகியவற்றை **எண்.2:1 முதல் 10:10** வரையுள்ள வேத பகுதியில் மோசே இஸ்ரவேலருக்கு தருகிறான்.

இஸ்ரவேலர் புறப்படுமுன் தேவன் கொடுத்த பாளயமிறங்கும் ஒழுங்குவிதிகள் இவைகளே. எங்கெல்லாம் சென்றார்களோ ஆங்காங்கே தங்குமிட வசதிகளை தேவன் தந்தார். பயணத்துக்குத் தேவையான வெளிச்சம் (அக்கினிஸ்தம்பம்), நிழல் (மேகஸ்தம்பம்) ஆகியவற்றைத் தந்தார். கர்த்தரே அவர்களது பிரயாண வழிகாட்டியாக இருந்தார் கூடவே சென்றார். ஆனால் அவர்கள் பிரயாணத்தை ஆரம்பித்தபோது எல்லாம் சுமுகமாயிருக்கவில்லை.

## II. வனாந்தரத்தில் இஸ்ரவேலர் (பாரான் வனாந்தரம்): (எண். 11 - 21)

புதியப் பிரச்சனைகள் எழுந்தன!

- இஸ்ரவேல் ஜனங்கள் முறையிட (complain) ஆரம்பித்தனர் (எண். 11).
- மோசேயின் சொந்த சகோதரியான மிரியாமும், சகோதரனும் பிரதான ஆசாரியனுமாயிருந்த ஆரோனும் மோசேக்கு எதிர்த்து நின்றனர். மோசே மட்டும் தலைவனல்ல என்பது அவர்களது முறையீடு, (எண்.12). முறையிட்டவர்களை தேவன் தண்டித்தார்.
- கர்த்தருடைய அக்கினி ஜனங்களுக்குள்ளே பற்றியெரிந்தது (11:1).
- மிரியாம் உறைந்த மழையின் வெண்மையைப் போன்ற குஷ்டரோகியானாள், (12:10). அவளைக் குணமாக்கும்படி தேவனிடம் மோசே கெஞ்சிக் கேட்டபோது அவள் குணமாக்கப்பட்டு சபையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார். பாரான் வனாந்தரத்திலே பிரயாணத்தைத் தொடர்ந்தனர், (12:16).

**தேசத்தைச் சுற்றிப்பார்த்தல்:**

தாங்கள் சுதந்தரிக்கப்போகும் தேசம் எப்படிப்பட்டது என்று பார்க்கும்படி, ஆட்களை அனுப்பும்படி தேவன் சொன்னார். கோத்திரத்துக்கு ஒருவராக தலைவர்கள் பன்னிரண்டுபேரை மோசே அனுப்பினான். **யோசுவாவும், காலேபும்** அவர்களில் இருவர், (எண் 13).

வேவு பார்க்கச் சென்றவர்கள் நாற்பது நாட்கள் கானானைச் சுற்றிப்பார்த்தனார் **எபிரோன்** மட்டும் போனார்கள். **எஸ்கோல்** பள்ளத்தாக்கில் இருவர் சுமக்கத்தக்க ஒரு பெரியத் திராட்சைக் குலையை அறுத்தனர்;. சில மாதுளம்பழங்களையும் அத்திப்பழங்களையும் சுமந்துகொண்டு பாரான் வனாந்தரத்தில் காதேசில் தங்கியிருந்த இஸ்ரவேலரிடத்தில் வந்து சேர்ந்தனர், (13:22,23,26).

**துர்செய்தி:**

திரும்பியவர்களில் பத்துபேர் விசுவாசமில்லாத துர்ச்செய்தியைக் கொண்டுவந்தனர். அந்த தேசத்தில் குடியிருக்கும் ஏனாக்கின் குமாரரையும், அமலேக்கியர், ஏத்தியர், எபூசியர், எமோரியர், கானானியர் என்னும் ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; நம்மைப் பார்க்கிலும் பலவான்கள், அவர்களெல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள், இராட்சதப்பிறவிகள், தங்கள் குடிகளையே பட்சிக்கிற தேசம் என்று துர்செய்தி பரம்பச் செய்தார்கள். ஆனால் யோசுவாவும், காலேபும் அவர்களைக் காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப் போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார், அவர்களுக்கு பயப்பட வேண்டியதில்லை என்றனர். (13:30; 14:6-9). அவர்களிருவரையும் கல்லெறிந்துக் கொல்ல ஜனங்களெல்லாரும் ஆலோசனை பண்ணினர், நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம் என்றனர் (14:3).

**வாக்குத்தத்தத்துக்கு வந்த மாற்றம்:**

கர்த்தர் இறங்கி பேசினார் முரட்டாட்டமான அந்த ஜனங்கள் அனைவரையும் அழித்துப்போடுவேன் என்றார். மோசேயோ மன்றாடி ஜெபித்தான்; கர்த்தர் ஜனங்களை மன்னித்தார் (14:20).

ஆனால், கர்த்தர் தமது **உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தில்** மாறுதலை ஏற்படுத்தினார். நான் உங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்துள்ளேன்; ஆனால் நீங்களோ உங்கள் பிள்ளைகளுடன் மறுபடியும் எகிப்துக்கேத் திரும்பிச் செல்லத்திட்டமிட்டுள்ளீர்கள்; அப்படித் திரும்ப வேண்டாம். மாறாக, 40 வருடங்கள் நீங்களனைவரும் இந்த வனாந்தரத்தில் அலைந்து திரிவீர்கள்; முறுமுறுத்து எதிர்த்து நின்ற அனைவரும் இங்கே செத்து மடியுமட்டும் அலைவீர்கள். கொள்ளையாவார்கள் என்று சொன்ன உங்கள் பிள்ளைகளையோ நான் வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசிக்கச் செய்வேன் என்றார்.

உடனேதானே துர்செய்தி கொண்டு வந்தவர்கள் வாதையினால் செத்தார்கள், (14:37). முறுமுறுத்து எதிர்த்து நின்ற அனைவரும் வனாந்தரத்தில் செத்து விழுமட்டும், தேசத்தைச் சுற்றிப் பார்த்த நாற்பது நாள் இலக்கத்தின்படியே ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, அவர்கள் நாற்பது வருஷம் தங்கள் அக்கிரமங்களைச் சுமந்து கர்த்தரின் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவார்கள் என்று கர்த்தர் சொன்னார், (14:29:34).

**யோசுவா, காலேப்** ஆகியோர் நற்செய்தியைக் கொண்டு வந்தபடியால், பிள்ளைகள் சுதந்தரிக்கப்போகும் தேசத்தில் அவர்களும் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டனர். வாக்குத்தத்த தேசத்தில் பின்பற்ற வேண்டிய இன்னும் சில பிரமாணங்களையும் அவர்களுக்குக் கொடுத்தார் (எண் 15).

**எதிர்த்து நின்ற கோராகின் கூட்டத்தாரும் இஸ்ரவேலரும்:** (எண் 16,17)

**கோராகு** என்ற லேவி கோத்திரத்தான், ரூபன் கோத்திரத்திலுள்ள **தாத்தான் அபிராம், ஓன்,** இன்னும் பிரபலமான 250 பேரோடும் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிர்த்து வந்து, தங்களுக்கும் தலைமை ஸ்தானம் வேண்டும் என்றனர். அவர்களனைவர்மேலும் தேவ கோபாக்கினை வந்து, பூமி பிளந்து அவர்களை விழுங்கிப்போட்டது. ஆனாலும் தங்கள் பிதாக்களுக்கு துணை நில்லாத கோராகின் புத்திரர், பிற்காலத்தில் சங்கீதங்களைப் பாடி இசையமைத்தனர்; என்பதைப் பார்க்கிறோம். கலகக்காரர் மட்டுமே விழுங்கப்படுவர், எல்லாருமல்ல, என்பது தேவநீதியாகும். ஆரோனின் கோல் துளிர்க்க, ஆரோன் என்னுடையவன் என்றும் தேவன் நிரூபித்தார்.

**ஆசாரியர், லேவியருக்குப் புதிய பிரமாணங்கள்:** (எண். 18,19)

புதிய பிரமாணங்களைத் தரும்போதும், இஸ்ரவேலர் பாரான் வனாந்தரத்திலுள்ள காதேஸ் பர்னேயாவில்தான் இருந்தார்கள்.

ஆசரிப்புக் கூடாரத்தைப் பாதுகாத்தல், ஆசாரியருக்கும் லேவியருக்குமுரிய தசமபாகம், லேவியர்; பிரதான ஆசாரியனுக்குச் செலுத்தவேண்டிய தசமபாகம், பாவ சுத்திகரிப்புக்குரிய சிவப்பான கிடாரி (கிறிஸ்துவின் இரத்தத்துக்கு அடையாளம், எபி. 9:13,14; 1யோ 1:7), ஆகிய பிரமாணங்கள் தரப்பட்டன.

**ஒரு சந்ததி மரிக்கிறது, அடுத்த சந்ததி தொடருகிறது:** (எண்.20,21)

எண்ணாகமம் 20,21 அதிகாரத்திலுள்ள சம்பவங்களின்படி இஸ்ரவேலர் தங்கள் வனாந்தரப் பயணத்தில் 38 ஆண்டுகளைக் கடந்துவிட்டனர். கர்த்தருடைய வார்த்தையின்படியே எதிர்த்து நின்றவர்கள் வனாந்தரத்தில் செத்து மடிந்தனர். இதை நினைத்துத்தான் ஆரோன் மரித்தபோது மோசே,

"எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது; ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்".

''எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்" (சங்கீதம் 90:9,10) என்று பாடுகிறான் எனலாம். மிரியாமும், ஆரோனும் மரித்தனர் (20:1,24-29).

**மேரிபாவின் தண்ணீர் :**

தண்ணீரல்லாத சூழ்நிலையில் ஜனங்கள் மீண்டும் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிர்த்து கலகம்பண்ணினார்கள். கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள் என்று கர்த்தர் சொன்னார், மோசேயோ தன் கையை ஓங்கி கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான் (20:8,11). தண்ணீர் வந்தது; ஆனால் மோசேயும், ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக கர்த்தரைப் பரிசுத்தம் பண்ணாதபடியாலும், அவரை விசுவாசியாதபடியாலும் கானானுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை (20:12,24).

இஸ்ரவேலரது 39ஆண்டு வனாந்தர "பிரயாண விபரம்" **எண்ணாகமம்** 33:1-49-ல் தரப்பட்டுள்ளது; 40 இடங்களில் அவர்கள் பாளயமிறங்கிய விபரங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

**III. மோவாபின் சமவெளிகளில் இஸ்ரவேலர்:** (எண். 22 - 36)

வனாந்தரப் பயணத்தில் கடைசி எல்லையான மோவாபின் சமவெளிகளில் இஸ்ரவேலர் வந்து சேர்ந்தனர். இன்னும் யோர்தான்நதியை மட்டும் கடந்தால்

போதும், வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசித்துவிட முடியும். சுமார் இரண்டுவார காலத்தில் வந்தடைய வேண்டிய பயணத்தை 39 ஆண்டுகளாக பாரான் வனாந்தரத்தில் அலைந்து கொண்டிருந்தனர். செத்து மடிந்தவர்கள்போக மற்றவர்கள் தொடர்ந்து மோசேயின் வழிநடத்துதலிலும், தேவனின் வாக்குத்தத்தத்திலும் விசுவாசம் வைத்து முன்னேறினர்.

**பாலாக்கும் பிலேயாமும்:** (எண். 22-24)

பாலாக் மோவாபியருக்கும் மீதியானியருக்கும் ராஜாவாயிருந்தான். பிலேயாம் கர்த்தரின் தீர்க்கதரிசி அல்ல. அவன் மந்திரவாதம்செய்து, அஞ்சனம்பார்த்து, குறிசொல்லும் கூட்டத்தைச் சேர்ந்தவன்; **எந்தோரில்** இருந்த ஸ்திரீயைப் போன்றவன், (1சாமு.28:7). இவன் கள்ளத்தீர்க்கதரிசிகளில் ஒருவன். தம்முடைய ஜனங்களை ஆசீர்வதிக்கும்படி இவன் வாயில் கர்த்தர் தமது வார்த்தைகளைத் தந்தாலும் (கழுதையும் பேசியதே!) இவன் கர்த்தரின் தீர்க்கதரிசிகளின் வழியில் வந்தவன் அல்ல. அவன் பாகாலின் மேடுகளில் ஏறியவன் (22:41). இருபத்தொரு பலிபீடங்களைக் கட்டச்செய்து அந்நிய தெய்வங்களிடத்தில் குறிகேட்டான் (23:1,14,29); குறிசொல்லுவதற்குரிய கூலியைப் பெற்றான் (22:7;24:1). கடைசியில் இவன் வெட்டிக் கொல்லப்பட்டான், (எண்.31:8,16). இவனைக் கூலிக்கு அமர்த்தி, இஸ்ரவேலரை சபிக்கும்படி பாலாக் ஏவினான். ஆனால் கர்த்தர் குறுக்கிட்டு அவன் இஸ்ரவேலரை ஆசீர்வதிக்கும்படி செய்தார். தமது ஜனங்களை தமது வழியிலேயே ஆசீர்வதிக்கும் தேவன் அவர்!

**பிலேயாமின் தந்திரமான போதனையும் பினெகாஸூம்:** (எண். 25)

இஸ்ரவேலரை கர்த்தர் சொன்னபடி பிலேயாம் ஆசீர்வதித்தாலும், அவர்கள் வேசித்தனத்தில் விழுந்து மோவாபிய தெய்வங்களை வணங்கவும், அவர்களைப் பின்பற்றவும் கள்ளப்போதனை செய்தான்; இந்த வேசித்தனத்தினால் பெரிய வாதை உண்டாயிற்று. ஜனங்கள் கண்ணெதிரே இஸ்ரவேலன் ஒருவன் மீதியானியப் பெண் ஒருத்தியை இஸ்ரவேலரது பாளயத்துக்குள் கூட்டிக் கொண்டுவந்தான். அவர்கள் வேசித்தனம் பண்ணிய அறையில் ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரின் குமாரன் **பினெகாஸ்** ஒரு ஈட்டியுடன் சென்று அவர்களிருவரையும் ஒருமிக்கக் குத்திக்கொன்று, கர்த்தருக்கான தனது பக்தி வைராக்கியத்தைக் காண்பித்தான். இதற்காக அவனுக்கு நித்திய ஆசாரியப்பட்டத்தை தேவன் உடன்படிக்கையாகக் கொடுத்தார், (எண். 25:7-13).

வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசிக்கும் இளந்தலைமுறையினருக்கு ஆசாரியனாக **பக்தி வைராக்கியமுள்ள பினெகாஸ்களே** நியமிக்கப்பட வேண்டும் என்ற தேவ நியதி இங்கு உறுதிப்படுத்தப்பட்டது. இன்றும் ஊழியரில் இத்தகைய பக்திவைராக்கியம் காட்டும் பினெகாஸ்களைக் கர்த்தர் தேடிக்கொண்டிருக்கிறார்.

**இரண்டாவது மக்கள்தொகைக் கணக்கெடுப்பு** (Second Census): (எண். 26)

**எண்.1:45,46-ன்** முதலாவதுக் கணக்கெடுப்பில் எண்ணப்பட்ட அனைவரும் 39 வருட வனாந்தர அலைச்சலின் காலத்தில் கர்த்தருடைய கட்டளைப்படியே செத்து மடிந்தனர். காலேபும், யோசுவாவும் தவிர, வேறொருவரும் அவர்களில் மீதியாயிருக்கவில்லை, (26:65). எனவே, இரண்டாவது மக்கள்தொகைக் கணக்கெடுக்கும்படி கர்த்தர் மோசேயுடன் சொன்னார், **எண்.**26:51-ன் படி ஆறு இலட்சத்து, ஓராயிரத்து, எழுநூற்று முப்பதுபேர் (6,01,730) எண்ணித் தொகையிடப்பட்டனர்.

**யோசுவா, புதிய தலைவன்:** (எண். 27)

மோசே, மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் கர்த்தரை விசுவாசியாமலும், கனம்பண்ணாமலும் போனதினால் அவனும் கானானுக்குள் பிரவேசிப்பதில்லை என்பதில் கர்த்தர் மிகவும் உறுதியாயிருந்தார் (எண்.27:12-14; உபா.3:23-28). அவன் ஸ்தானத்தில் யோசுவாவை அபிஷேகம் பண்ணச் சொன்னார். கானான் தேசத்தை **அபாரீம் மலையில் பிஸ்கா** என்னும் சிகரத்தில் ஏறி நின்று பார்க்கும்படி அனுமதிக்கப்பட்டான். இந்த மலை **நேபோ மலை** என்றும் அறியப்பட்டது, (உபா.34:1-3). எனினும் நமதாண்டவரின் மறுரூபமலை தரிசனத்தில் கானான் தேசத்தின் எர்மோன் மலையில் மோசே காணப்பட்டது (மத். 17:3; மாற்கு 9:4) மோசேயின் மேலிருந்த கர்த்தரின் அங்கீகரிப்பை நமக்குச் சொல்லுகிறது!

**வாக்குத்தத்த தேசத்தில் தேவையான பிரமாணங்கள்:** (எண் 28-29)

தாங்கள் தேவனோடு கொண்டிருந்த உறவே இஸ்ரவேலரை வாழவைத்தது. எனவே சுதந்தரிக்கப் போகும் தேசத்திலும் அனுதின பலிகள், மாதந்தோறும் செலுத்தும் காணிக்கைகள், வருடப்பிறப்பு மாதப்பிறப்புகளுக்கான காணிக்கைகள், பஸ்கா, மற்றும் பிற பண்டிகைகளுக்குரிய பிரமாணங்கள் அனைத்தையும் மோசேயின் மூலம் தேவன் தந்தார்.

**தேசத்தை சுதந்தரிக்க ஆயத்தப்படுதல்:** (எண். 30-36)

இஸ்ரவேலர் நாற்பது ஆண்டு காலங்கள் நாடோடிகளாகவே தங்கள் காலத்தைச் செலவளித்து விட்டனர். இப்பொழுதோ, வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசித்து ஒரு தேசமாக நிலைப்படப் போகின்றனர்.. அதற்குத் தங்களை அவர்கள் ஆயத்தப்படுத்த வேண்டிய விபரங்களை மோசேமூலம் தேவன் தந்தார்.

கானானின் எல்லைகளைக் குறித்தும், யோர்தானுக்கு கிழக்கே, இப்பொழுது அவர்கள் முகாமிட்டிருக்கும் பகுதியில் ரூபன், காத், மனாசேயின் பாதிப்பகுதியினர் (2½ கோத்திரங்கள்) பெறப்போகிற சுதந்தரத்தையும் குறித்துக் கொடுத்தான், மோசே.

எகிப்திலிருந்து புறப்பட்ட இருபது வயதும் அதற்கு மேற்பட்ட வயதினர் அனைவரையும் வனாந்தரத்தில் தேவன் செத்து மடியவிட்டாலும் மோசே, ஆரோன், மிரியாம் முதலானோரும் கானான் சென்றடையாமல் வனாந்தரத்திலே மரிக்க அனுமதித்தாலும் அவர்களுக்கு பாதுகாப்புத் தந்து, மன்னாவை ஓய்வின்றித்தந்து (25 லட்சம் ஜனங்களும் வனாந்தரப் பயணத்தில் ஒவ்வொரு நாளும் 675டன் (6,75,000 கிலோ) மன்னா சேகரித்தனர். அவர்கள் சத்துருக்களை அழித்து (எண்.21:1-3,21,29-35) கொள்ளிவாய் சர்ப்பங்கள் கடித்தபோது அவர்களை முற்றிலும் அழிக்காமல் வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைக்கும் ஏதுவையும் உண்டுபண்ணி, குணமாக்கி ஆதரிக்கிற கர்த்தராயிருந்தார். தமது உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தைக் காக்கும்படி இளந்தலைமுறையினரை கானான் தேசத்தில் கொண்டு சேர்ப்பதில் அக்கறையுள்ள தேவனாயிருந்தார்.

நாமும், அவரது பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து உண்மையுடன் நடந்து, **"...கடந்துபோய் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படியும்''** (உபா.3:25), சென்றடையும்படியும் நமது நல்ல தேவன் நமக்கும் கிருபை அருளுவாராக.



# ஆவிக்குரிய நெருக்கம்

## (Spiritual Intimacy)

**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**

Senior Pastor - A.G. Church Vellore-6.

Director - Counselling Dept. Tamil District Council of SIAG

**ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்** (பிரசங்கி 4:9)

மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்ற காரணத்தினால் ஆண்டவர் ஏற்ற துணையை ஒவ்வொருவருக்கும் கொடுக்கிறார். ஆண்டவர் கொடுத்த இந்த ஆசீர்வாதமான தனித்தன்மை வாய்ந்த திருமண உறவை கெடுப்பதற்கு பல விதங்களில் பிசாசானவன் முயற்சி செய்கிறான்.

ஒரு குடும்பத்தில் உணர்ச்சி பகுதிகளில் (Emotional), உறவுகளில் (Relational), ஆவிக்குரிய பகுதிகளில் (Spiritual), பொருளாதாரத்தில் (Financial), சரீரத்தில் (Physical) என பல வகையான பிரச்சனைகள் வருவது இயற்கையானது.

### ஆவிக்குரிய நெருக்கம்

முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது (பிர.4:12) என்ற வசனத்தின்படி கணவன், மனைவி, ஆண்டவர் என்று இணைந்திருப்பது மிகவும் அவசியம். ஆவிக்குரிய நெருக்கம் என்பது இதுதான். கிறிஸ்தவ திருமண உடன்படிக்கையில் கணவன், மனைவி, ஆண்டவர் என்ற 3 பேர்களும் இணைந்திருக்கிறார்கள். ஆவிக்குரிய நெருக்கம் அதிகமாக இருக்கும்போது, பிரச்சனைகள் நிச்சயம் குறைவாக இருக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது.

### ஆவிக்குரிய நெருக்கத்திற்கான தடைகள்
### (Blocks for Spiritual Intimacy)

1. ஈகோ (Ego)
2. வளர்ப்பு முறைகள் (Brought ups)
3. ஒத்துழையாமை (Non-cooperative spirit)
4. மன்னியாமை (Unforgivens)
5. ஆவிக்குரிய நெருக்கத்தின் முக்கியத்துவத்தை அறியாமை (Ignorance of Spiritual intimacy)
6. இணைந்து ஜெபிக்காமை (Not Praying together)
7. பிரச்சனைகளை உடனுக்குடன் சரிசெய்யாமை (Not resolving the conflicts at the earliest)

### ஆவிக்குரிய நெருக்கம் குடும்பத்தில் வளர செய்ய வேண்டியவை

**1. Commit Strongly – ஆழமான அர்ப்பணித்தல்**

எபேசியர் 5:31-ல் இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

**2. Connect progressively – தொடர்ச்சியாக இணைந்திருத்தல்**

உணர்வுப் பூர்வமாக ஒரு கணவனும், மனைவியும் ஆழமாக

இணைக்கப்பட்டு, தொடர்ச்சியாக இணைந்திருப்பதின் மூலம் எளிமையாக ஆவிக்குரிய நெருக்கத்தை அனுபவிக்க முடியும். உங்கள் இதயங்களை திறந்து, ஆழமாக ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தும்போது, உண்மையாக நெருக்கம் ஏற்படுகிறது.

தனித்தன்மையை விட்டுக்கொடுக்காமல், உங்களது வாழ்க்கையின் மையப்பகுதியில் ஆவிக்குரிய பிரகாரமாக இணைந்திருப்பது, ஆழமான, வல்லமையான உணர்வு பூர்வமான, சரீர பிரகாரமான நெருக்கத்தை வாழ்க்கையில் ஏற்படுத்தும் என Dr.Alice Grace என்ற திருமண ஆலோசகர் கூறுகிறார்.

### 3. Create Spiritual Atmosphere - ஆவிக்குரிய உறவை உருவாக்குதல்

முறையாக குடும்ப ஜெபம் செய்வதின் மூலமும், வேதாகமக் கொள்கைகளின்படி வாழ அர்ப்பணிப்பதின் மூலமும் நம்முடைய வீடுகளில் ஆவிக்குரிய சூழலை உருவாக்கலாம். ஒரு வாசனை திரவியம் இடம் முழுவதையும் வாசனையை நிரப்புகிறதுபோல, நம்முடைய வாழ்க்கையும், வீடும் ஆவிக்குரிய சூழலால் நிறைந்திருக்க வேண்டும். அதற்கான முயற்சியை தீவிரமாக எடுக்க வேண்டும்.

ஊழியர்கள் மத்தியில் (around 80-90 members) எடுக்கப்பட்ட Surveyயில் 64% குடும்ப ஜெபம் செய்வதாகவும் அதில் 46% மனைவியோடு இணைந்து ஜெபிப்பதாகவும் தெரிவித்தார்கள். பல திருச்சபைகள் இணைந்து நடத்திய ஒரு குடும்ப முகாமில் எடுக்கப்பட்ட Surveyயில் 39% குடும்பங்கள் தான் குடும்ப ஜெபம் செய்வதாக தெரிந்திருக்கிறது 100% மாற ஜெபிக்க வேண்டும். மாறும்போது நிச்சயமாக மாற்றங்கள் நடக்கும்.

குடும்ப ஜெபங்களையும் கணவன்-மனைவி இணைந்து ஜெபிக்கும் ஜெபங்களையும் அதிகரியுங்கள்.

### 4. Chase the concept of Togetherness – இணைந்து செய்யும் செயல்களை தொடருங்கள்

1. சேர்ந்து ஜெபித்தல் (Praying Together)
2. சேர்ந்து தியானித்தல் (Meditating Together)
3. சேர்ந்து ஆராதித்தல் (Worshiping Together)
4. சேர்ந்து உபவாசித்தல் (Fasting Together)
5. சேர்ந்து நல்ல ஆவிக்குரிய செய்திகளை கவனித்தல் (Listening food Spiritual messages Together)
6. சேர்ந்து திட்டமிடுதல் (Planning Together)
7. சேர்ந்து தரிசனம் பெறுதல் (Having vision Together)

இப்படிபட்ட செயல்களை தீவிரப்படுத்தும்போது ஆவிக்குரிய நெருக்கம் அதிகரிக்கிறது.

### 5. Crave the marks of Spiritually connected couples–ஆவிக்குரிய பிரகாரமாக இணைந்திருப்பதின் அடையாளங்களை வாஞ்சித்தல்)

ஆவிக்குரிய பிரகாரமாக இணைந்திருப்பதில் சில அடையாளங்களால் ஆசீர்வாதங்கள் உண்டு. அவைகளை அடைய வேண்டும் என வாஞ்சை, ஆர்வம், விருப்பம் வேண்டும். அவைகளில் ஒரு சில வரிகளை கீழே தருகிறேன்.

வெளிப்படைத்தன்மை - Transparency
ஒற்றுமை - Unity
ஒருவருக்கொருவர் மரியாதை கொடுத்தல் - Mutual respect
தெளிவாக பேசிக் கொள்ளுதல் - Clear communication
சரீர பிரகாரமான நெருக்கம் - Physical intimacy

**முடிவு**

எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு ஆண்டவரிடத்தில் உண்டு. வாழ்க்கையின் எந்த பகுதியில் பிரச்சனைகள் வந்தாலும் ஜெபம் அவற்றை சரிசெய்யும் என்பதில் மாற்று கருத்துக்கள் இல்லை. உங்களுடைய குடும்பத்தின் ஆவிக்குரிய வாழ்க்கையில் கவனம் செலுத்துங்கள். ஆவிக்குரிய நெருக்கத்தை அதிகரியுங்கள். சத்துருவை மேற்கொண்டு சமாதானமாக, ஆசீர்வாதமாக வாழ ஆண்டவர் நமக்கு உதவி செய்வாராக.

---

## தேசத்தின் எழுப்புதலுக்காக தேவன் தேடும் மனிதன்



1. ஜெபமே அவனது முக்கிய அலுவலாக இருக்க வேண்டும்.
2. ஆத்தும அறுவடையே அவனது குறிக்கோளாக இருக்க வேண்டும்.
3. தேவ சமூகமே அவனது இன்பமாக இருக்க வேண்டும்.
4. தேவ ஊழியமே அவனது பாரமாக இருக்க வேண்டும்.
5. கடின உழைப்பே அவனது பிரியமாக இருக்க வேண்டும்.
6. கர்த்தருக்காகப்படும் பாடுகள் அவனுக்கு சந்தோஷமாக இருக்க வேண்டும்.
7. உலகம் அவனுக்கு வனாந்தரமாக இருக்க வேண்டும்.
8. சுகபோகம் அவனுக்கு குப்பையாக இருக்க வேண்டும்.
9. நேர்மை அவனுடன் பிறந்ததாக இருக்க வேண்டும்.
10. மாய்மாலம் அவனுக்கு அருவருப்பாக இருக்க வேண்டும்.
11. பாவம் அவனுக்கு கசப்பாக இருக்க வேண்டும்.
12. மன்னிக்கும் சுபாவம் அவனது நண்பனாக இருக்க வேண்டும்.
13. வேதவசனம் அவனது ஆகாரமாக இருக்க வேண்டும்.
14. தேவனைத் துதிப்பது அவனுக்கு பானமாக இருக்க வேண்டும்.
15. ஆவியின் அபிஷேகம் அவனது ஆடையாக இருக்க வேண்டும்.
16. பாவத்தைக் கண்டிப்பதில் அவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானாக இருக்க வேண்டும்.
17. பண ஆசை அவனுக்கு எதிரியாக இருக்க வேண்டும்.
18. ஜாதி வேற்றுமை அவனுக்கு வாந்தியாக இருக்க வேண்டும்.
19. அன்பு அவன் வாழ்வில் ஜீவ ஊற்றாக இருக்க வேண்டும்.
20. பிரசங்கத்தில் அவன் நயவசனிப்பில்லாது பவுலாக இருக்க வேண்டும்.
21. உபவாசம் அவனது உயிர்த் தோழனாய் இருக்க வேண்டும்.
22. தேவசித்தம் செய்தல் அவனுக்கு விருந்தாக இருக்க வேண்டும்.
23. வயிறு அவனது தேவனாக இருக்கக்கூடாது, போஜனப் பிரியனாய் இருந்தால் அவன் தன் தொண்டையிலே கத்தியை வைக்க வேண்டும்.
24. பரிசுத்தமே அவனது அலங்காரமாக இருக்க வேண்டும்.
25. பரலோகமே அவனது ஆஸ்தியாக இருக்க வேண்டும்.
26. அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன் என்று அறிக்கையிட வேண்டும் (பிலி. 3:11).

**தேசத்தின் எழுப்புதலுக்காக இப்படிப்பட்ட அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் தேவை!**

---

# நீதிமொழிகளில் காணப்படும் 7 வகையான மனிதர்கள்

**நீதிமொழிகள் புத்தகம் ஏழு வகையான மனிதர்களை பற்றி நமக்கு கூறுகிறது. அதைக்குறித்து சுருக்கமாக காணலாம்!**

**1. பேதை (SIMPLE)**

இவர்கள் அனைத்தையும் நம்பும் அறிவிலிகள். புத்தியீனமான காரியங்களை செய்து, ஆபத்தில் சிக்குண்டு, அடிக்கப்படும் மாட்டை போல் பலியாவார்கள் (நீதி.14:1,18;7:22;1:32). இதில் வியக்கத்தக்க காரியம் எதுவென்றால், இவர்கள் அறிவை வெறுத்து, பேதைமையையே விரும்பி, எப்பொழுதும் பேதையராகவே வாழ்வதில் பிரியப்படுகின்றனர் (நீதி.1:22; 8:4-5).

**2. மூடன் (STUPID)**

மூடர்கள் எனப்படுவோர் ஞானத்தை அலட்சியம் பண்ணி, பெற்றோர்களின் புத்திமதிகளுக்கு செவிக் கொடுக்க மறுக்கிறவர்கள் (நீதி.1:7; 15:5). இவர்களது அலட்சியமும், கவனமின்மையும், நிர்விசாரமும் இவர்களை அழிக்கிறது (நீதி. 1:32). மூடர்கள் தங்கள் மூடத்தனமான பேச்சால் அழிவையும், மதியற்ற விவாதங்களால் பகையையும், பின்பு தண்டனையையும் வருவிப்பார்கள். மூடர்கள் தீமையை விரும்பி, அதை விடாமல் பற்றிக்கொள்கிறவர்கள் (நீதி.18:6,7;13:19). மூடர்கள் ஒழுக்கத்தையும், கண்டிப்பையும் வெறுப்பார்கள். தங்கள் தவறுகளை திருத்திக்கொள்ள மறுப்பார்கள். எனவே தங்கள் மதியீனத்தால் மரிப்பார்கள் (நீதி.27:22;12:1;10:21). மூடர்கள் பெருமையுடன் தங்கள் மதியீனத்தை வெளிப்படுத்தி, அவமானத்தை சம்பாதிப்பார்கள். மேலும் நாயானது தான் கக்கினதை தின்னும்படி திரும்புவது போல மீண்டும் தங்கள் மூடத்தனத்துக்கு திரும்புவார்கள் (நீதி. 3:35; 13:16; 24:7; 26:1,11).

**3. பரியாசக்காரன் (SCORNER, SCOFFER)**

அகந்தையினால் நிறைந்து, கொடிய செயல்களை செய்கிறவரும், அறிவுரைகளை கேளாதவரும், ஆணவம் மிக்கவர்களும், தங்களை நல்வழிப்படுத்த முயற்சிப்பவர்களை வெறுப்பவர்களும் எவர்களோ அவர்களே பரியாசக்காரர்கள். (நீதி. 21:24; 9:7,8; 13:1). பரியாசக்காரர்கள் எப்பொழுதும் கலகம் செய்து வீட்டிலும், நகரத்திலும், நாட்டிலும் நாசத்தை உண்டாக்குகிறவர்கள் (நீதி. 22:10; 29:8).

**4. சோம்பேறி (SLUGGARD)**

உள்ளத்தில் உற்சாகமும், நோக்கமும், சுறுசுறுப்பும் இன்றி, உடலில் உழைப்பின்றி இருப்பவர்கள் சோம்பேறிகள். இவர்கள் தாங்கள் வேலை செய்யாமல் இருப்பதற்கு ஒருவராலும் நம்பவும், ஏற்றுக்கொள்ளவும் முடியாத விதமான சாக்கு போக்குகளை கூறுபவர்கள் (நீதி.22:13). எந்தவிதமான வேலையும் செய்ய சம்மதியாமல் வீணாய் தங்கள் பொழுதை கழிப்பார்கள்.

ஆகையால் அவர்கள் வறுமையில் வாடுவார்கள். இவர்கள் சோம்பேறிகள் என்பதால் இவர்களுக்கு யாரும் இரக்கம் காட்டவோ, உதவி செய்யவோ மறுத்து விடுவார்கள். சோம்பேறி எறும்பை கவனித்து பார்த்து வாழ்வு முறையை கற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதம் அறிவுறுத்துகிறது (நீதி.6:6-11; 20:4; 10:4). சோம்பேறிகள் அதிகமான தூக்கத்தை விரும்புகிறவர்கள். அவர்களுக்கு கிடைக்கும் உணவு பொருளை சமைக்கக் கூட மறுப்பவர்கள். சமைத்த உணவே கிடைத்தாலும் கூட அதை எடுத்து உண்பதற்கு சலித்து கொள்பவர்கள். இதனால் அவர்கள் வறுமையாலும், பட்டினியாலும் மடிய வாய்ப்புண்டு (நீதி. 20:13; 19:15; 24:34,35; 12:27).

### 5. துன்மார்க்கன் (SINNER)

சகலவிதமான தீய குணங்களின் குடியிருப்பாய் விளங்குபவரே துன்மார்க்கர். அவர்கள் மரியாதையின்றியும் கண்ணியமின்றியும், பரியாசமாய் பேசுகிறவர்கள்; எல்லோரையும் பகைக்கிறவர்கள்; ஒருவருக்கும் பயனற்றவர்கள் (நீதி.6:12;14:21). கர்த்தர் துன்மார்க்கரையும், அவர்கள் வழிகளையும், காணிக்கையையும், ஜெபத்தையும் அருவருக்கிறார் (நீதி.15:8,9). துன்மார்க்கர் தங்கள் பொல்லாத வழிகளினாலேயே அழிவை அடைவார்கள் (நீதி. 14:32).

### 6. ஞானவான் (SAGE)

ஞானவான்கள் அறிவையும், புத்தியையும், ஞானத்தையும் விலையேறப்பெற்ற பொக்கிஷத்தைப் போல தேடுகிறவர்கள்; கர்த்தருக்கு பயப்படுதலே ஞானம் என்று கண்டுணர்ந்து கொள்கிறவர்கள். ஞானத்தின் நெறிகளிலே நடக்கிறவர்கள், தீமைக்கு விலகி, நன்மை செய்து, பிறரின் நல்மதிப்பையும் நல்நம்பிக்கையையும் சம்பாதிக்கிறவர்கள். இவர்கள் கர்த்தரின் வழியிலே செம்மையாய் நடக்கிறபடியால் கண்ணியிலும், பாவத்திலும் சிக்கிக்கொள்ளமாட்டார்கள். இம்மையிலும், மறுமையிலும் கனம் அடைவார்கள் (நீதி. 2:4-5; 4:7-9; 3:23,25).

### 7. நீதிமான் (SAINT)

நியாயமானதை செய்து, நேர்மையான வழியிலே நடக்கிறவர்கள் நீதிமான்கள். அவர்கள் வாழ்வு குற்றமற்றதாகவும் சுத்தமானதாகவும், பிரகாசமாகவும் இருக்கும். அவர்கள் பேச்சிலும், செயலிலும் இனிமையும், உண்மையும் நிறைந்திருக்கும் (நீதி. 4:18; 8:20; 10:21,32; 12:5). நீதிமான்கள் தேவனின் பரிசுத்தமான வழிகளை கற்றுக்கொள்ள ஆவல் உடையவர்கள். சிங்கத்தைப்போல தைரியமுடையவர்கள். ஏழைகளின் நியாயத்தை மதிக்கிறவர்கள் (நீதி. 9:9; 10:6; 28:1,7). நீதிமான்கள் செய்யும் செயல்களின் முடிவு ஜீவனும், ஆசீர்வாதமுமாய் இருக்கும். அவர்கள் கனிதரும் பயனுள்ள வாழ்வு வாழ்கிறவர்கள். அவர்கள் கர்த்தருக்கு பயந்து நீதி நியாயத்தை உறுதியாய் கடைபிடிப்பதால், நிரந்தர அஸ்திவாரமுள்ளவர்களாய், அசைக்கப்படாதிருப்பார்கள் (நீதி. 10:16,25,30; 12:12).

இவர்களில் நாம் எந்த வகையை சேர்ந்தவர்கள்?



# தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்


## Rev. S. நெல்லைராஜா

வடமேற்கு மிஷனரி, உத்தம் நகர், புதுடெல்லி


### மிஷன் பணித்தளச் சாட்சி

### அறிமுகம்

எனது பெயர் நெல்லைராஜா. எனது மனைவி பெயர் ஸ்டெல்லா. நாங்கள் புதுடெல்லியில், உத்தம் நகர் என்கிற பகுதியில் மிஷனரியாக ஊழியம் செய்து வருகிறோம். எனது சொந்த ஊர் திருநெல்வேலி மாவட்டம் மூலைக்கரைப்பட்டி அருகில் உள்ள தெய்வேந்திரபேரி என்கிற கிராமம். மூலைகரைப்பட்டியில் ஊழியம் செய்து வருகிறதான கனத்திற்குரிய போதகர் ஸ்டீபன்பால் அவர்கள்தான் எனது ஆவிக்குரிய தகப்பனாய் இருந்து என்னை வழிநடத்தினவர். எனது மனைவி ஸ்டெல்லா வல்லநாடு திருச்சபையை சேர்ந்தவர்.

### இரட்சிப்பின் அனுபவமும், ஊழிய அழைப்பும்

கிறிஸ்தவ வாசனை அறியாத பாரம்பரியமிக்க குடும்பத்தில் ஆறாவது குழந்தையாக 1984-ம் ஆண்டு பிறந்தேன். தாயின் கருவிலே என்னை கொல்ல நினைத்தார்கள். ஆனால் கர்த்தர் என் கருவை கண்டார். என்னுடைய குழந்தை பருவமும், பூஜை, விக்கிரக வழிபாடுகளின் பின்னணியத்தினால் நிறைந்திருந்தது. குடும்பத்தின் வறுமை காரணமாக 1997-ல் மும்பை பட்டணத்திற்கு பிழைப்பதற்காக எங்கள் குடும்பம் குடிபெயர்ந்தது. மும்பையின் ஆரம்ப நாட்கள் ஆசீர்வாதமாக இருந்தாலும் போக போக குடும்பத்தில் பல பிரச்சனைகள், சண்டைகள், கடன் பிரச்சனை, வியாதி குடும்பத்தின் நபர்களை வாட்டி வதைத்தது. அம்மாவின் தாலியை விற்று வட்டி கட்டும் நிலைக்கு தள்ளப்பட்டோம். குடும்பத்தோடு தற்கொலை செய்துகொள்ளும் சூழ்நிலையில் இருந்தோம். எனது பதினாறாவது வயதில் ஒருநாள் அருகில் உள்ள தேவாலயத்திற்கு சென்றேன். அந்த நாள் என் வாழ்வின் வசந்தமாக மாறியது. அன்று முதல், சபையில் நடைபெற்ற ஒவ்வொரு ஜெபங்களிலும், ஆராதனைகளிலும் கலந்துகொண்டேன். என் பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலையும், என் குடும்பத்தின் நிலையும் மாறியது.

சபையின் ஒழுங்குகளுக்கு கீழ்படிந்து சின்ன சின்ன ஊழியங்களை செய்து வந்தேன். மத்தேயு 9ம் அதிகாரம் 36வது வசனத்தின்படி சந்திக்கப்படாத மக்களினங்களைப் பற்றிய தாக்கத்தையும், அவர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்கிற தாகத்தையும் கர்த்தர் இருதயத்தில் கொடுத்தார். முழு நேர ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்தேன்.

### எதிர்ப்புகளும், எதிர்பார்ப்புகளும்

மும்பையில் கல்லூரி படிப்பை முடித்து தனியார் பள்ளியில் தற்காலிகமாக ஆசிரியராக பணியாற்றி கொண்டிருந்த வேளையில் 2012-ம் ஆண்டு மீண்டும் குடும்பத்தில் புயல் வீசியது. எனது மூத்த சகோதரன் கொலை வழக்கில் சிறைக்குச் செல்ல, குடும்பம் சின்னாபின்னம் ஆனது. குடும்பமாக மீண்டும் சொந்த ஊருக்கு வரவேண்டிய நிலை உருவானது. குடும்பத்தில் எதிர்ப்புகளும் வலுத்தது. ஒருவன்

வேறு கடவுளை வணங்குவதால்தான் இந்த பிரச்சனைக்கு காரணம். சபைக்கு செல்லக்கூடாது, ஊழியம் செய்யக்கூடாது என்கிற எதிர்ப்புகள் மாத்திரம் அல்ல. நான் ஒருவன் சம்பாதித்தால்தான் குடும்பம் நடத்த முடியும் என்கிற எதிர்பார்ப்புகள் உருவானது. மூன்று மாதம் எந்த சபைக்கும் செல்லவில்லை. பாஸ்டர் ஸ்டீபன் பால் அவர்களின் அழைப்பும், அரவணைப்பும், அன்பும், மீண்டும் என்னை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தியது. ஆனால் குடும்பத்தினரின் எதிர்ப்பும், எதிர்பார்ப்பும் ஊழிய அழைப்பை மறக்கச் செய்தது. திருநெல்வேலியில் உள்ள ஒரு அலுவலகத்தில் வேலைசெய்து கொண்டிருந்தேன்.

### ஆரம்பகால ஊழியம்

என்னால் தொடர்ந்து வேலைக்குச் செல்ல முடியவில்லை. தேவசித்தம் செய்வதே எனது வாஞ்சையாய் இருந்தது. வேலையை விட்டு விட்டு வேதாகமக் கல்லூரிக்கு செல்ல தீர்மானித்தேன். பாஸ்டர் ஸ்டீபன் பால் அவர்களின் வழிநடத்துதலின்படி மதுரையில் உள்ள நமது AGTBC வேதாகமக் கல்லூரியில் B.Th பட்டம் பெற்றேன். எங்களது திருமணம் முடிந்த கையோடு மதுரை அனுப்பானடியில், கனத்துக்குரிய போதகர் T.R. ஜான் வின்ஸ்லி அவர்களிடம் உதவி ஊழியராக நமது ஸ்தாபனத்தினால் நியமிக்கப்பட்டேன். Rev. T.R. ஜான் வின்ஸ்லி அவர்கள் என்னை உதவி ஊழியனாக அல்ல, உடன் ஊழியராய் என்னை வழிநடத்தினார்கள். அவர்களுடைய அர்ப்பணிப்பும், உண்மையும், வாழ்க்கை முறையும், சாட்சியுள்ள வாழ்வும் இளம் ஊழியனாகிய எனக்கு சவால் நிறைந்ததாகவும், இன்னும் தேவனுக்காய் வாழும் வைராக்கியத்தையும் கொடுத்தது.

அவர்களோடு இணைந்து ஊழியம் செய்த 3 ஆண்டு காலம் மறக்கமுடியாத அனுபவமாக மாறியது. அவர்களிடத்தில் காணப்பட்ட மிஷனரி ஊழியத்தின் உற்சாகமும், தியாகமும் எனது மிஷனரி ஊழியத்தின் அழைப்பையும், தரிசனத்தையும் தட்டி எழுப்பியது. அவர்களது அனுமதியுடனும், உதவியுடனும் எனது M.Div படிப்பையும் முடித்தேன்.

### மிஷனரியாகிய நான்

எங்கள் மிஷனரி ஊழியத்தின் தரிசனத்தை அறிந்த அவர்கள், ஸ்தாபனத்தின் அனுமதியுடன் ஜெபித்து அன்போடு எங்களை மிஷனரியாக அனுப்பி வைத்தார்கள். கடந்த ஏப்ரல் மாதம் 23-ம் தேதி நாங்கள் தமிழ் பிரதேசத்தின் மிஷனரிகளாக டெல்லி வந்தோம்.

### மிஷன் பணித்தளம்

சுமார் 2,50,000 மக்கள் தொகை நிறைந்த கோலி, பண்டித், சர்மா, ராஜ்புத் மற்றும் இஸ்லாமிய மக்களினத்தை கொண்ட மேற்கு டெல்லி மாவட்டத்தில் உள்ள உத்தம் நகர் கிழக்கு பகுதியில் ஊழியம் செய்ய டெல்லியில் உள்ள நமது ஸ்தாபன தலைவர்களால் அனுப்பப்பட்டோம். கர்த்தர் எங்களுக்கென திறந்த வாசலை இப்பகுதியில் கட்டளையிட்டார்.

### சபையும், ஊழியமும்

இங்கு வாடகைக்கு ஒரு வீட்டில் வசித்து வருகிறோம். வீட்டின் அருகில் வேறு ஒரு திருச்சபைக்கு செல்லும் (நமது ஸ்தாபனத்தின்) விசுவாசியின் வீடு அருகில் உள்ளது. அவர் தனது வீட்டை இலவசமாக சபை நடத்துவதற்கு ஆயத்தப்படுத்திக் கொடுத்தார். ஆசீர்வாத ஏ.ஜி சபை என்ற பெயரில் திருச்சபையின் ஊழியத்தை

ஆரம்பித்தோம். கர்த்தர் இன்றளவும் அற்புதமாக நடத்தி வருகிறார்.

கடந்த ஐந்து மாதத்தில் இரண்டு குடும்பங்களை (6 நபர்கள்) கர்த்தர் கொடுத்தார். ஞாயிறுதோறும் சுமார் 21 சிறுபிள்ளைகள் ஞாயிறு பாடசாலைக்கும், 6 இளம் வாலிப சகோதர, சகோதரிகள் வாலிபர் கூடுகைகளிலும் கலந்து கொள்கின்றனர். வருங்காலங்களில் செய்ய வேண்டிய திட்டங்களையும் தேவன் தந்திருக்கிறார்.

### சவால் நிறைந்த மிஷனரி பணியும், தேவனின் வழிநடத்துதலும்

நாங்கள் ஏப்ரல் மாதம் 21-ம் தேதி திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டோம். அன்றை நாளிலேயே டெல்லியில் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இன்று வரை சபைகள் திறப்பிற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆனாலும் தேவன் ஆத்துமாக்களை சந்திக்கவும், ஊழியங்களை தொடர்ந்து செய்யவும் வழிநடத்துகிறார்.

### அன்பான வேண்டுகோள்

மத்தேயு 9:37-ம் வசனத்தின்படி தேவனின் இருதய துடிப்பை அறிந்து, தேவ சித்தம் நிறைவேற, தங்கள் சபையின் இளம் ஆத்துமாக்களை அறுவடையின் பணிக்கு அனுப்பித் தர அன்புடன் வேண்டுகிறோம்.

### நன்றிகள் பல

எங்களை உருவாக்கிய வேதாகமக் கல்லூரி ஆசிரியர்கள், தேவ ஊழியர்கள், வழிநடத்தி ஜெபித்து, பொருளாதார உதவிகளை செய்து வருகிறதான தமிழ் பிரதேசத்தின் கனத்திற்குரிய ஒவ்வொரு ஊழியர்களுக்கும் நன்றிகள் பல. எனக்காய், என் மனைவி ஸ்டெல்லா மற்றும் ஊழியங்களுக்காய் தொடர்ந்து ஜெபித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.











## பீல் (இந்து) மக்களினத்திற்காக ஜெபியுங்கள்:



**மக்கள் இனம்** : பீல் (இந்து)

**மொழி** : ஹிந்தி

**மக்கள் தொகை** : 1,68,12,000

**கிறிஸ்தவர்கள்** : 0.76%

**அதிகம் வாழும் பகுதி** : மத்தியபிரதேசம், ராஜஸ்தான், குஜராத்

நம்பிக்கை : பீல் இன மக்கள் இந்து மத கோட்பாடுகளை பின்பற்றுகின்றனர். இவர்களுக்கென பாரம்பரிய நம்பிக்கைகள் இருந்த போதிலும், வட உயர் ஜாதி குருக்களிடம் கடவுளின் ஆவி இருப்பதாக நம்புகின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தங்களை தேடி வந்த குரு ஒருவர், உண்மையான கடவுளைப் பற்றியும் சிலை வழிபாடுகளிலிருந்து விலகி குற்றமற்ற வாழ்க்கை வாழ வேண்டும் என்றும் சொன்னதாகவும் நம்புகின்றனர். இவர்கள் இப்போதும் ஒளியையும், வார்த்தையையும் வணங்குகின்றனர்.

**தத்தெடுத்துள்ள மண்டலம் : நாகர்கோவில்**

### ஜெப விண்ணப்பங்கள்

✦ நமது தமிழ் பிரதேசத்திலிருந்து தாங்குகிற மிஷனரிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் பாதுகாப்பிற்காகவும், சுகத்திற்காகவும் ஜெபிப்போம்.

✦ மிஷனரிகள், அவர்களது குடும்பங்கள் மற்றும் சபை விசுவாசிகள் தாக்கப்படுவதும், பொய் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடிக்கப்படுவதும் தடுத்து நிறுத்தப்படவும் ஜெபிப்போம்.

✦ இந்தியா முழுவதிலும் உள்ள வேதாகமக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிடையே மிஷனரி தாகம் உண்டாகவும், அநேக மிஷனரிகள் எழும்பவும் ஜெபிப்போம்.

✦ பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மிஷனரிகளின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

✦ சந்திக்கப்படாத மக்கள் இனங்களின் மத்தியில் ஊழியம் நடைபெறவும், மக்களினங்கள் இரட்சிக்கப்படவும், சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உண்டாகவும் ஜெபிப்போம்.

✦ வடமாநிலத்தில் சபைகள் நடத்தப்படுவதற்கும், சபைகளுக்கென இடங்கள் வாங்குவதிலும், ஆலயம் கட்டப்படுவதிலும் காணப்படுகிற தடைகள், பிரச்சனைகள் விலக ஜெபிப்போம்.

---

**யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்** (ஏசாயா 6:8).



# நற்செய்தி ஊழியத்தில் புருஷர்கள்

## Rev. J. தேவதாசன் கலையரசன்

Regional Overseer, North Central Region

ஒரு ஸ்தல சபை அல்லது ஒரு இயக்கம் தேவன் ஏற்படுத்திய நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமானால், அதன் அஸ்திபாரம் ஸ்திரமாகவும், அதன் உள் கட்டமைப்பு வலுவானதாகவும் இருக்க வேண்டும். அந்தப்படி நமது ஸ்தாபனம் கிறிஸ்துவையும் அவரது உபதேசத்தையும் அஸ்திபாரமாக கொண்டும், சிறந்த உள் கட்டமைப்புடன் இருப்பதால் வலுவானதாகவும், பலுகிப் பெருகிபூமியை நிரப்பும் ஆசீர்வாதத்துடனும் வளர்ந்து வருகின்றது. உள் கட்டமைப்பு என்பது வலுவான தலைமையின் கீழ் இயங்கும், பல்வேறு இலாகாக்களின் கூட்டமைப்பு என்று பொருள் கொள்க. ஓர் ஆசிரியர் பள்ளிபோல, ஒரே ஒரு போதகர் மட்டும் செயல்படும் சபையாக இல்லாமல், பல்வேறு இலாகாக்கள், சீஷர்கள், தலைவர்களைக் கொண்ட சபையே சிறந்த உள்கட்டமைப்பு கொண்ட சபையாகும்.

நமது ஸ்தாபனத்தில் பல்வேறு இலாகாக்கள் ஏற்படுத்தி அநேகர் களப்பணியாற்றுவதால் வலிமையுடன், சிறந்த உள்கட்டமைப்புடன் பரந்துவிரிந்து பரவுகிறது. அவ்விதம் சிறப்பாக செயல்படும் பல்வேறு இலாகாக்களில் புருஷர் ஐக்கியமும் ஒன்று. 2009-ல் புருஷர் ஐக்கியம், நமது ஸ்தாபனத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதன் தலைவராக Rev.கிளாரன்ஸ் மருதய்யா அவர்கள் கடந்த வருடம் வரை பணிபுரிந்துள்ளார்கள். Rev.V.S சாமுவேல் ராஜ், Rev.மாசிலாமணி ஆகிய போதகர்கள் புருஷர் ஐக்கிய தலைமைத்துவக் குழுவில் நீண்டகாலம் பணியாற்றியவர்கள் ஆவர். கடந்த வருடம் முதல் Rev.ஆலன் பிராஸ்பர் தலைமையில் புருஷர் ஐக்கிய ஊழிய இலாகா சீரும் சிறப்புமாய் செயல்பட்டு வருகின்றது. Rev.ஜெபராஜ் (தூத்துக்குடி), Rev.ஜான்சன் (திருவேற்காடு) ஆகிய போதகர்களும் புருஷர் ஐக்கிய தலைமைத்துவக் குழுவில் அங்கம் வகித்து ஊழியம் செய்து வருகின்றார்கள்.

ஒவ்வொரு ஸ்தலசபையிலும் புருஷர் ஐக்கியம் ஏற்படவேண்டும். சபையிலுள்ள அனைத்துப் புருஷர்களையும் கிறிஸ்துவுக்குள் நிலைப்படுத்தும் நோக்கத்துடனும்,ஒவ்வொரு புருஷரும் மிஷன் தரிசனம் அடையவேண்டும் என்ற இலக்குடனும், **AG புருஷர் ஐக்கிய இலாகா** செயல்பட்டு வருகிறது. புருஷர் ஐக்கியத்தில் உள்ள பிராந்திய தலைவர்கள்,மண்டலதலைவர்கள் ஒத்துழைப்புடன் நடத்தப்படும் முகாம்களிலும், பயிற்சிகளிலும், புருஷர்கள் சீஷத்துவத்திலும், தலைமைத்துவத்திலும் வளர போதிக்கப்படுகிறது. புருஷர்கள் எழும்பினால் அனைத்து சபைகளும், அனைத்து குடும்பங்களும், ஆவிக்குரிய மறுமலர்ச்சி அடைவதுடன், வளர்ச்சி செழிப்பாக இருக்கும் என்ற குறிக்கோளுடனும் புருஷர் ஐக்கிய இலாகா திட்டமிட்டு பணிசெய்து வருகிறது.

அந்த வகையில் நற்செய்தி ஊழியத்தில் புருஷர்களின் பங்கு என்னவென்பதையும் அதுவும் இக்குறிப்பிட்ட நெருக்கடியான காலங்களிலும் புருஷர்கள் செய்ய வேண்டிய நற்செய்தி ஊழியம் இன்னதென்று அறியவும் இக்கட்டுரை உதவும். தனது சபையில் புருஷர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என நினைக்கின்ற (Ministry to men) போதகரையும்,ஆண்கள் ஐக்கியதலைவர்களையும் மனதில் வைத்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இதை வாசிக்கிற எந்த ஒரு ஆண் விசுவாசியும் பயன் பெறமுடியும்.

## I.ஆண்களின் சுவிசேஷ ஊழிய ஈடுபாட்டுக்குரிய தடைகளை அகற்றுங்கள்.

1.ஆண்கள் ஆவிக்குரிய வாஞ்சையற்றவர்கள், மேலோட்டமானவர்கள் என்கின்ற அபத்தமான பொய்ச் செய்தியை மனதைவிட்டு முதலாவது அகற்றுங்கள். உலகத்தில் 3கோடிக்கும் அதிகமான சபைகள் இருப்பதாக கணிக்கப்படுகிறது. அதில் 99.99சதவீதம் ஆண்கள் தானேபோதகர்களாக இருக்கிறார்கள். அவர்கள் என்ன மேலோட்டமானவர்களா? ஒரே ஒரு பிரச்சனை விசுவாசிகள் என்று அறியப்படு பவர்களில், ஊழியத்திற்கு முன்வரும் ஆண்களின் சதவீதம் குறைவாயிருக்கிறது. ஆனால் அதை வைத்து மொத்தத்தில் ஆண்களே ஆழமான அனுபவத்தை விரும்பாதவர்கள், அர்ப்பணிக்க மாட்டார்கள் என நினைப்பது தவறில்லையா?

இப்படிப்பட்ட தவறான மனநிலையுடன் கொடுக்கப்படும் எதிர்மறைச் சவால்களே, ஆண்களை ஊழியத்தில், குறிப்பாக சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபடத் தூண்டுவதற்குப் பதிலாக, தடையாக மாறிவிடுகிறது.

2.பெண்களுடன் அல்லது பெண்கள் இலாகாவுடன் ஒப்பிடாதிருங்கள். இயல்பாக பெண்களிலிருந்து-ஆண்கள் வேறுபட்டவர்கள்.இந்நிலையில் பெண் ஊழியங்களுடன் ஆண் ஊழிய ஒப்பீடு தவறு. இப்படி ஆண்களை விமர்சனம் செய்பவர்களால், ஊழியத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்ய அழைப்புக் கொடுக்க இயலாது.

ஒப்பீடு என்பதே முதிர்ச்சியடைந்த புருஷர் ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்றாகும். அதற்கு பதிலாக அவர்களின் செயல் திறன், தாலந்துகளை அறிந்து சாதகமான அணுகுமுறையுடன் (Positive Approach) அழைப்புக் கொடுங்கள் அப்போது சபையின் ஊழியங்களிலும், நற்செய்தி ஊழியங்களிலும் அதிக ஈடுபாடு கொள்வார்கள்.

3.பெரிய அளவிலான ஊழிய திட்டத்திற்கு ஆரம்ப விசுவாசிகளை வற்புறுத்தாதிருங்கள் (Mass Outreach) சபையிலுள்ள ஆண் விசுவாசிகளுக்கு, பெரும் திரள் நற்செய்தி ஊழியம் (Mass Evangelism) பெரும்பாலும் பொருத்தமானதாயிராது. எனவே அவர்களுக்கு தனித்தும், சிறு குழுவாகவும் செய்யக் கூடிய நற்செய்தி ஊழியப் பயிற்சியையும் வாய்ப்பையும் தந்தருள வேண்டும். (Oikos) போன்ற எளிய ஊழியதிட்டங்கள் ஆண்களை ஈர்க்கிறது.

## II.ஆண்களைசுவிசேஷ ஊழியத்தில் ஈடுபாடுச் செய்யவேண்டியது

1. இயேசு கிறிஸ்து அழைப்புக் கொடுத்தார், பயிற்சிகொடுத்தார் (மத்.4:19).
2. சிறுசிறு குழுவாக அனுப்பிவைத்தார் (லூக்.10:1) வந்து அறிக்கை கொடுக்கச் செய்தார் (10:17).

3. தேவையான திருத்தங்கள் செய்து அவர்களை மேலும் ஊக்குவித்தார் (10:18-24).
4. பொது ஆராதனைகளில் அழைப்புக் கொடுப்பதைவிட, தனித்து இயேசு கிறிஸ்து அழைப்புக் கொடுத்ததுபோல அழைப்புகொடுக்க வேண்டும். அநேகர் அர்ப்பணிப்பார்கள்.

### III. நெருக்கடி மிகுந்த தற்காலத்திற்கேற்ற அணுகுமுறை

1. சுவிசேஷம், ஆண்களுக்கும்-பெண்களுக்கும் ஒன்றுதான். ஆண்களை, சுவிசேஷம் அறிவிப்பதற்காக அணுகும் முறைகள் தான் வேறுபடும்.
2. ஆண்களைச் சந்திக்க, ஆதாயம் செய்ய ஆண்களே மிகப் பொருத்தமானவர்கள்.
3. ஆண்களை சீஷர்களாக்க சிறந்த வாய்ப்புத் தருவது சிறு குழுவே. ஆகவேதான் பொது ஆராதனைகளுடன் நிறுத்திக் கொள்ளாமல், அவர்களுக்கென்று பிரத்யேகமான **புருஷர் ஐக்கியம்** சபைகள் தோறும் ஏற்படுத்த வேண்டியுள்ளது.
4. வாராந்திர புருஷர் ஐக்கியம் வெறும் பொழுதுபோக்கு அம்சம் நிறைந்ததாய் இராமல் சுவிசேஷ நோக்கத்துடன் இருக்கவேண்டும்.
5. அறிமுகமான அவர்களது நண்பர்களை, பெயர் எழுதி ஜெபித்து உரிய காலத்தில் சுவிசேஷம் அறிவித்து ஆதாயம் செய்யும் முறை (Oikos) மிக எளிதானது.
6. ஆத்தும பாரம் ஏற்படச்செய்து, அவர்களது நண்பர்கள், உறவினர்கள் பெயர்களை எழுதி ஜெபிக்க செய்ய வேண்டும். தர்க்கமின்றி சுவிசேஷம் அறிவிக்க எளியமுறை Oikos முறைதான்.
7. தேவையில்லாத மனிதர் எவருமில்லை. எனவே தேவையுள்ள மனிதர்களைச் சந்தித்து தேவையை சந்திக்கும் இயேசுவை அறிமுகப்படுத்த வேண்டும் (எபி. 11:6).
8. இப்போதிருக்கும் தொடு உணர்வு தேவைகளை மட்டும் அல்ல (Felt Need) நித்திய தேவைகளை சந்திக்க வல்ல இயேசுவை சொந்த இரட்சகராக ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வழிநடத்த வேண்டும் (யோ 6:47, 1:12).
9. ஆதாயம் செய்யப்பட்ட புருஷர்களை போதகருடனும், சபையிலுள்ள இதர ஆண் விசுவாசிகளுடனும் அறிமுகப்படுத்த வேண்டும்.
10. சீஷராக்க சிறந்த வழி ஆண்களுக்கென்று நடத்தப்படும் **வாராந்திர கூடுகையில்** உடனடியாக பங்கு பெறச்செய்வதே.

### இறுதியாக

சபையிலுள்ள கொஞ்ச ஆண்கள் தங்களை குறைவாக எண்ணாமல், தீவிரமாக ஜெபித்து ஆத்துமபாரம் கொண்டு தங்களை போன்ற பிற ஆண்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்க துவங்கினால் எழுப்புதல் உண்டாகும். பிசாசு நம்பச்செய்துள்ள பொய்ச்செய்திகளை மனதைவிட்டு அகற்றுவோம். சபைக்குள் இருக்கும் விசுவாசிகளை சுவிசேஷம் அறிவிப்பவர்களாக மாற்றினால் சபையின் ஆண்களின் எண்ணிக்கை அதிகமாகும். ஆண்களின் எண்ணிக்கை அதிகமாகும் அளவு ஊழியர்களின் எண்ணிக்கை, சபைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். தேசம் இயேசுவை அறியும்.



# தமிழ்பிரதேச மத்திய வாலிபர் ஊழியம்

## Digital Dependence (தொழில் நுட்ப சார்பு)

**Rev. D. சாலமோன்**
President, Christ Ambassadors

அற்புதர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை கிறிஸ்துவின் ஸ்தானிகர் ஊழியங்களின் சார்பில் தெரிவிக்கிறோம். அநேகருக்கு மிகுந்த பிரயோஜனமாக இருந்த Digital Dependence என்ற தலைப்பில் கிறிஸ்துவின் ஸ்தானிகர் ஊழியங்களின் சார்பில் நடத்தப்பட்ட webminar-ல் Rev.Dr.ரெனி சாமுவேல் அவர்கள் அளித்த செய்தியின் சுருக்கத்தை அனைவருக்கும் பிரயோஜனமாக்கிட இப்பக்கங்களில் பதிவிடுகிறோம்.

(இக்கட்டுரையிலுள்ள தொழில் நுட்பசார்பு, டிஜிட்டல்சார்பு, இண்டர்நெட், ஆன்லைன், டிஜிட்டல் மீடியா போன்ற வார்த்தைகள், தற்போது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பயன்படுத்தும் இண்டர்நெட்டை குறிக்கிறது)

Digital dependence என்ற தலைப்பில் இப்பக்கங்களில் தொழில்நுட்பம் அதன் பயன்பாடுகளும், அது ஏற்படுத்தும் விளைவுகளும், அதனை பயன்படுத்தும் வரைமுறை குறித்து வேத வசனத்தின் கண்ணோட்டத்தில் கற்றுகொள்ளுவோம்.

இண்டர்நெட் மனித வாழ்வின் அங்கமாக மாறிவிட்டது. ஆக்கப்பூர்வமான கருவியான இண்டர்நெட் Covid-19 தடைக்காலங்களில் திருச்சபையின் ஆராதனை, ஜெபம் போன்றவற்றிக்கும் கல்வி, விளையாட்டு மற்றும் பல பொழுதுபோக்குக் களுக்கும் கூட ஆன்லைன் பயன்பட்டு வருகிறது.

Internet சிலருடைய வாழ்வில் முன்னேற்றத்தையும்; சிலருடைய வாழ்வில் பின்னடைவையும் விளைவிக்கிறது. Internet ஒருவரை பாராட்டுக்குரியவராகவும், மற்றொருவரை இகழ்ச்சிக்குரியவராகவும் சமூகத்தில் அடையாளப்படுத்துகிறது. Internet பயன்படுத்தும் விதமே,அதனை பயன்படுத்துவோருக்கு சோதனையாகவும், வேதனையாகவும், சாதனையாகவும் அமைகிறது.

**டிஜிட்டல் மீடியா பயன்படுத்த காரணங்கள்:**

1. நண்பர்களோடு தன் மனதில் இருப்பதை வார்த்தைகள் மூலமாகவோ / புகைப்படத்தின் மூலமாகவோ பகிர்ந்துகொள்ள,
2. மனஅழுத்தத்திலிருந்து வெளியே வர,
3. பொழுதுபோக்கிற்காக,
4. கல்வி சார்ந்த தகவல்களை பெற்றுகொள்ள,
5. சமுதாயத்தில் தனக்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள,
6. அன்றாட உலகநிகழ்வுகளை அறிந்துகொள்ள,
7. குடும்ப உறவினர்களோடு தொடர்புகொள்ள போன்ற காரணங்களுக்காக டிஜிட்டல் மீடியா பயன்படுத்தப்படுகிறது.

**டிஜிட்டல் மீடியாவின் நன்மைகளும் சாதனைகளும்:**

1. எந்த தலைப்பிலும் அதிக தகவல்கள்-ample information resources on all topics
2. எளிதாய் பகிர்தல்-Effortless sharing
3. பொழுதுபோக்கு - Entertainment
4. கணக்கில்லா தொடர்புகள் - Unlimited communication
5. வீட்டில் இருந்து பணிசெய்தல் -Work from home
6. வங்கி பரிவர்த்தனை, வர்த்தகம் - Online banking, shopping

**டிஜிட்டல் மீடியாவின் சோதனைகளும் வேதனைகளும்:**

1. சரீர சுகாதார அபாயங்கள் - Health risks
2. சுயதனிமைப்படுத்துதல் -Self isolation
3. தனியுரிமை சிக்கல்கள் - Privacy issues
4. குறைவான மனிதமதிப்பு - Less human values
5. அடிமைத்தனம் - Addiction

இணையதளம் இல்லாத உலகம் சாத்தியமில்லை என்று சொன்னாலும் அதுமிகையாகாது. ஆக்கப்பூர்வமான கருவியான டிஜிட்டல் மீடியாவை பிரயோஜனமான காரியங்களுக்கு பயன்படுத்துவதைவிட தவறான காரியங்களுக்கே அதிகமாக பயன்படுத்துகின்றனர். தினமும் 1 மணிநேரத்திற்குமேல் அவசியமில்லாமல் இண்டர்நெட் பயன்படுத்துவதால் மூளையின் செயல்பாடுகள், சிந்தனைதிறன், செயல்திறன், உணர்வுகள், உறவுகள் பாதிக்கப்படுவதோடு சாத்தான் தற்காலிகமானவைகளினால் நம்மை சோதித்து முன்னுரிமையுடைய நிரந்தரமானதைவிட்டு திசைதிருப்புகிறான். தேவனிடத்திலிருந்தும், நமது வாழ்வின் நோக்கத்திலிருந்தும், நமது அன்றாடக வேலையிலிருந்தும் திசைதிருப்பி விடுகிறது. "உலகத்தையும் அதில் உள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்" (1 யோவான் 2:15-17) என்ற வேதவசனத்திற்கு மாறான வாழ்வை மாற்றிவிடுகிறது.

மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய காரியங்களை நிறைவேற்ற நம்மை பாவத்திற்கு விற்று போடுகிறோம்.

2தீமோத்தேயு 2:22-26 வசனத்தின்படி பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகி ஓடவேண்டும் எனவே வேதம் கட்டளையிடுகிறது. டிஜிட்டல் மீடியாவில் பரவிமலிந்து கிடக்கும் கண்ணிகளுக்கு அதனை பயன்படுத்துவோர் தங்களை காத்துகொள்வது அவசியம்.

**டிஜிட்டல் சார்பை தவிர்ப்பதற்கான வழிமுறைகள்:**

**Steps to stop being digitally dependent**

1. தொழில் நுட்பத்தை பயன்படுத்த இலக்கு (நேரம்) குறிக்க வேண்டும் Set goals for when you can use technology.
2. கைப்பேசி நேரத்தை மற்ற காரியங்களுக்கு கொடுங்கள் Replace your smartphone with other activities.
3. டிஜிட்டல் அடிமைத்தனத்தின் தீமைகளை எழுத்தால் எழுதுங்கள் Write down the harmful effects of your addiction.
4. சமூக வலைதள பயன்பாட்டிற்கு எல்லை குறியுங்கள் Limit social media use.
5. உங்களுக்கு திட்டங்கள் வைத்து செயல்படுங்கள் Create projects for yourself
6. அதிகாலையில் கைப்பேசியை கண்டிப்பாய் பயன்படுத்துவதை தவிர்க்கவும் அதிகாலை தேவனுக்குரிய நேரம் Skip the morning digital check-in, Morning Dawn time with God.
7. உங்கள் எதிர்கால வாழ்வின் தேவைகளை முன்னுரிமைப் படுத்துங்கள் Priorities your needs உலகம் இயங்க digital தேவை (need) என்ற நிலைமாறி கட்டாயம் (must) என்ற சூழ்நிலையில் digital நம்மை அடிமைப்படுத்தாமல், digital-ஐ நாம் தேவ இராஜ்ஜிய வளர்ச்சிக்காக சரியான விதத்தில் கையாள பழகிக்கொள்வோம்.

தேவையானது ஒன்றே நம்மைவிட்டு எடுபடாத நல்ல பங்காகிய இயேசுவையே தெரிந்துகொண்டு, பரிசுத்தத்தை காத்துகொண்டு, இக்கால வாலிபர்களை கிறிஸ்துவின் ஸ்தானிகராக ஆதாயப்படுத்த digital media வை நல்ல தளமாக (platform) மாற்றி கொள்வோம். நம்மை வெளிப்படுத்தாமல் கிறிஸ்துவை உலகிற்கு காட்டுவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்

சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ



பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை - 20

ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். இந்த மாதமும் ஒரு அற்புதமான கதையை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஒரு வித்தியாசமான விறுவிறுப்பான கற்பனை கதை தான். ஆனால் ஆழமான அர்த்தமுடைய கதை. முழுவதும் வாசித்து என்ஜாய் பண்ணுங்க.. வாங்க கதைக்குள்ள போகலாம்.

பசியோடு நீந்தி களைத்த ஒரு குட்டி மீன், தனக்கு முன் மிதந்து கொண்டிருந்த அந்த கொழு கொழு புழுவைக் கண்டதும் பேரானந்தம் கொண்டது. அதன் அருகில் வேகமாக நீந்தியது. தனது வெகுநேர பசிக்கு நல்ல விருந்து மிதந்து வருவதை எண்ணி அளவில்லா ஆனந்தமடைந்தது. ' இன்று நல்ல சாப்பாடு, ஒரு பிடி பிடித்து விடுவேன்!' என்று எண்ணிக்கொண்டு அந்த தூண்டிலில் உள்ள புழுவை நோக்கி விரைந்து சென்றது குட்டி மீன் சோனு. இதைக்கண்ட சோனுவின் மூத்த நண்பர்கள் பதறிபோய் தொங்கும் புழுவை உண்ண வேண்டாம் 'அது உனக்கு ஆபத்து... நீ அதனை சாப்பிட்டால் வாயில் கம்பி குத்தி செத்து விடுவாய்' என்று கூறின.

அனுபவசாலிகளின் வார்த்தைகளை குட்டி மீன் சோனு ஒரு நிமிடம் யோசித்தது. இருப்பினும், புழு தன்னருகில் கொழு கொழுவென மிதப்பதை பார்த்தால் நாக்கில் எச்சில் ஊறுகிறது. என்ன செய்வது என யோசித்துக்கொண்டே குட்டி மீன் ஒரு முடிவுக்கு வந்தது. 'இந்த பெரிய மீன் அண்ணன்கள் நம்மிடம் பொய் சொல்லுகிறார்கள். நான் இதனை சாப்பிட்டால் அவர்களுக்கு உணவு கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சத்தில் என்னை பயமுறுத்தி இருக்கிறார்கள்... என்று சோனு தனக்குள் சமாதானம் செய்துகொண்டு புழுவின் அருகில் நெருங்கியது. அப்பொழுது சோனுவின் மாமா சீனு வேகமாய் வந்து அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றி, கோபத்துடன் திட்டி தீர்த்தது. உன்னிடம் எத்தனை முறை கூறினாலும் நீ எங்களை தானே சந்தேகப்படுகிறாய். நீ என்னோடு கடலின் கரைபக்கம் வா.. உண்மை புரியும் என்று கூறி சோனுவை இழுத்துச் சென்றது. அங்கே ஏராளமான மீன்கள் வாயில் புழுக்களுடன் தூண்டிலில் சிக்கி செத்துகிடந்தது. 'பார்த்தாயா சோனு.... நீ கண்ட புழு உணவு அல்ல.. உன் உயிரை பறிக்கும் ஆயுதம். இந்த காட்சியைப் பார்த்தாவது திருந்து' என்று கூறி விட்டு சென்றது.

ஒரு சில வாரம் நல்ல பையனாக இருந்தது சோனு. ஆனாலும் நாளுக்கு நாள் வித்தியாசமான கொழு கொழுவென புழுக்களைப் பார்த்து பார்த்து நாக்கில் எச்சில் ஊறியது. ஒரு நாள் சோனு இப்படியாக யோசித்தது. நான் அறிவாளி.. தூண்டிலில் சிக்காமல் புழுவை மட்டும் வேகமாக கொத்திக்கொண்டு வரும் திறமை என்னிடம் உள்ளது. அந்த பெரிய மீன்கள் சோம்பேறிகள், அதனால் தான் தூண்டிலில் சிக்கி விட்டனர். என் திறமையை இந்தக் கடலுக்கு காட்டுகிறேன் என்று சபதம் போட்டுச் சென்றது.

ஒரு தூண்டிலில் அழகாக தொங்கிய புழுவை பிடித்து ஒரு வாய் சுவைத்து. ஆஹா.. என்ன அருமையான ருசி.. என்று சொல்லி முடிக்கும் முன்னர் யாரோ

மேலே இழுப்பது போன்று இருந்தது. அந்தோ பரிதாபம்... சோனு தூண்டில் புழுவிற்கு இரையானது.

அன்பான தம்பி, தங்காய் தூண்டில் புழு போல சாத்தான் பல காரியங்களை ஒவ்வொரு நாளும் நம்முடைய வாழ்க்கையில் கண்முன் கொண்டு வருவான். அதில் நீங்கள் மயங்காமல் வேத வசனம் சொல்லுகிறபடி நல்ல பிள்ளைகளாக இருக்கணும். வீட்டில் பெரியவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும். எனக்கு யாரும் புத்திமதி சொல்ல வேண்டாம், எனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்துக்கொண்டு வாழக்கூடாது. கண் காணும் எல்லா பொருள்களையும் வாங்க அடம் பிடிக்கக்கூடாது.

மொபைல், கம்ப்யூட்டர், லேப்டாப் என ஏதோ ஒன்றை ஆன்லைன் வகுப்பிற்காக நீங்க பயன்படுத்தலாம். ரொம்ப கவனமாயிருக்கணும். அக்கம் பக்கம் கண்ணில்படும் விளம்பர காட்சிகளை கிளிக் செய்து பிசாசின் தூண்டிலில் சிக்கிவிடக்கூடாது. என்ன நோக்கத்திற்காக ஆன்லைன் பயன்படுத்துகிறீர்களோ அந்த நோக்கம் முடிந்ததும் உடனே வெளியே வந்து விடுங்கள். இண்டர்நெட் என்ற வார்த்தையில் நெட் (வலை) இருப்பதை கவனியுங்கள். வலையோ, தூண்டிலோ எப்படியிருக்கும் என்றோ, எங்கே இருக்கும் என்றோ நம்மால் கணிக்க முடியாது. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எந்த ரூபத்திலும் இருக்கலாம். நாம் தான் நமது ஆத்துமாவை காத்துக்கொள்ள எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தீமையை விட்டு விலகுவதே செம்மையானவர்களுக்கு சமனான பாதை. தன் நடையை கவனித்திருக்கிறவன் தன் ஆத்துமாவை காக்கிறான் (நீதி 16:17).

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8).

இந்த வேத வசனங்களை மனனம் செய்து சிந்தியுங்கள்..! பிசாசின் வஞ்சகங்களுக்கு தப்புங்கள்..!!

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

---

## தாழ்மை என்னும் நற்பண்பு

தாழ்மை எனும் நற்பண்பு கீழ்காணும் விதிமுறைகள் வாயிலாக கடைப்பிடிக்கப்படுகிறது

1. உங்கள் வாழ்வின் புற சூழ்நிலைகளின் அடிப்படையில் உங்களைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொள்ளாதீர்கள்.
2. கிழிந்த பழைய உடைகளை உடுத்துவதும், எவ்விடத்திலும் தலைகவிழ்ந்து பவ்யமாக நடத்தலும் தாழ்மை ஆகாது. உங்களை குறித்த உங்கள் நிஜமான மதிப்பீடும் உங்கள் தகுதியின்மையைக் குறித்த உணர்தலுமே தாழ்மை.
3. உங்களை குறித்த உங்களின் மதிப்பீடு போலவே பிறர் உங்களை பற்றி கொண்டிருக்கும் மதிப்பீடும் இருக்கும் என்று கருதி திருப்தி அடையுங்கள்.
4. உங்களின் நற்கிரியைகளுக்காக புகழப்படுவதை விரும்பாமல், அவைகளை பிறர் அறியாமல் மறைவாக செய்ய விழையுங்கள்.

5. உங்கள் பிறப்பு, பெற்றோர், படிப்பு, தொழில், வேலை, அந்தஸ்து இவைகளைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையை தவிருங்கள்.

6. நேரடியாகவோ மறைமுகமாகவோ மற்றவரின் பாராட்டை, புகழ்ச்சியை கவர்ந்திழுக்கும் வகையில் பேசாதீர்கள்.

7. பிறரால் பாராட்டப்படும் தருணங்களில் பெருமிதம் கொள்ளாமல், தேவனுக்கு மகிமையை செலுத்துங்கள்.

8. மெய்யான தாழ்மையும், ஒழுக்கமும் நிறைந்தவராய் வாழ்ந்து நற்சாட்சி பெறுங்கள்.

9. மற்றவர்களால் புகழப்படும்போது கர்வம் கொள்ளாதீர்கள். மாறாக பிறர் கண்டு வியக்கும் வண்ணம் உங்களுக்கு தாலந்துகளை அளித்த ஆண்டவருக்கு மகிழ்வுடன் நன்றி கூறுங்கள்.

10. பிறர் உங்கள் நற்குணங்களை பாராட்ட வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் போலியாக அவர்களிடம் உங்கள் குறைகளை பற்றி கருத்து கூறும்படி கேட்காதீர்கள்.

11. பிறர் உங்களை மட்டம் தட்டினால், குறைவாக மதிப்பிட்டால், கோபம் கொண்டு அதை உள்ளத்தில் இரகசியமாக சேர்த்து வைக்காதீர்கள். உங்களுக்கென்று உங்களை முகஸ்துதி செய்யும் நபர்களை தேடி திரட்டாதீர்கள்.

12. உங்களை தலைக்கனம் கொள்ள தூண்டும் சாத்தானின் ஆலோசனைகளை ஒருபோதும் ஏற்காதீர்கள்.

13. எப்பொழுதும் மற்றவர்களை மனதார உண்மையாக பாராட்டுங்கள்.

14. நீங்கள் வறுமையில் இருந்தாலும், மற்றவர்கள் நல்ல வேலை மற்றும் வருமானத்துடன் செழிப்பாக இருப்பதை காணும்போது மகிழுங்கள். உங்களுக்கு இருப்பதிலே திருப்தியாக இருங்கள்.

15. பிறருடன் உங்களை ஒருபோதும் ஒப்பிடாதீர்கள். அப்படி ஒப்பிட முற்பட்டால் பிறரிடம் உள்ள நற்குணங்களை உற்று கவனித்து அவர்கள் உங்களைவிட எவ்வளவு சிறந்தவர்கள் என்று எண்ணுங்கள்.

16. உங்களிடம் காணப்படும் தவறுகள் குறைகளை நியாயப்படுத்த முயலாமல் அவற்றை ஒப்புக்கொண்டு திருத்தி கொள்ள முயலுங்கள். 'நேர்மை என்பது பொய்யை உடையாக உடுத்திக்கொள்ள விரும்பாது'

17. உங்களிடம் காணப்படும் பெலவீனங்கள் குறைவுகளுக்காக தேவனுக்கு நன்றி கூறுங்கள். ஏனெனில் அவைகள் நீங்கள் அகந்தையினால் அழியாமல் காக்கவும், தாழ்மை எனும் கிருபையில் பெருகவும், உங்களுக்கு தேவன் தயவாய் அருளியிருக்கும் உதவிகள், பாதுகாப்பு வளையங்கள்.

18. மற்றவர்கள் உங்களை விட திறமையற்றவர்கள் என்று சிறுமைப்படும் விதமாக அவர்களின் பெலவீனங்களை வெளிப்படுத்தாதீர்கள்.

19. நம்மையும் நமக்குரியதையும் கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணித்து வாழ்வதையே அவர் முக்கியமாய் கருதுகிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**ஜெரமி டெய்லர் (1613 - 1667)** எழுதிய **பரிசுத்த வாழ்வின் விதிமுறைகளும், அப்பியாசங்களும்** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

மொழியாக்கம் : திருமதி. சூசன்னா ஜான், திருச்சி.



# மன்னிப்பு (Forgiveness)

Rev. R. நெல்சன் ஞானகுமார்
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார், மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்தேயு 6:14,15).

## I. ஏன் மன்னிக்க வேண்டும்

**1. ஆண்டவரின் மன்னிப்பு** (சங்கீதம் 103:10)

ஆண்டவர் நமது பாவங்களுக்குத்தக்கதாக நம்மை தண்டியாமல் நம்மை மன்னித்திருக்கிறார். நாமும் மன்னிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார். நாம் மன்னிக்காவிட்டால் ஆண்டவரும் நம்மை மன்னிக்க மாட்டார். ஆண்டவரும் மன்னிக்காவிட்டால் பரலோகம் போக முடியாது.

**2. இயேசு கிறிஸ்துவின் மாதிரி** (லூக்கா 23:24)

மன்னிக்க முடியாதவர்களையும் மன்னிப்பவர் இயேசு, கையும் களவுமாக விபச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெண்களை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று சட்டமே சொல்லுகிறது. ஆனால் இயேசுவோ மன்னித்துவிட்டு இனி பாவஞ் செய்யாதே என்று அனுப்பினார்.

**3. சாத்தான் நுழையாமலிருக்க** (2 கொரி. 2:10,11)

மன்னியாதவர்கள் இருதயமே சாத்தான் எளிதில் நுழையக்கூடிய வாசஸ்தலமாகும். எனவே சாத்தானின் கிரியைகளுக்கு இடம் கொடாதிருக்க வேண்டுமானால் மன்னித்துவிடுங்கள்.

**4. சுகமடைய** (யாக்கோபு 5:16)

உள்ளே இருக்கும் கசப்பு பல சரீர வியாதிகளுக்கு காரணமாயிருக்கிறது. எனவே உள்ளான காயங்கள் ஆற்றப்படும்போது சரீர வியாதிகளும் குணமாகும்.

மற்றவர்களை மற்றவர்களுக்காக மன்னிக்காவிட்டாலும், நமக்காகவாவது நாம் மன்னிக்க வேண்டும்.

## II. மன்னியாமைக்கான அடையாளங்கள் (Symptoms of unforgiveness)

கீழ்க்கண்ட அடையாளங்கள் உங்களிடமிருக்குமானால் யாரோ ஒருவரை இன்னும் மன்னிக்காமல் இருக்கிறீர்கள் என்பதே உண்மை.

**1. எதிராளி என்ன செய்தாலும் தவறாகவே தெரியும்**

யாரை மன்னிக்காமலிருக்கிறீர்களோ அவர்கள் என்ன செய்தாலும் உங்களுக்கு தவறாகவே தெரியும். உதாரணமாக அவர்கள் உங்களைப் பார்த்து

சிரிக்கும்போது பரிகாசம் பண்ணுவதாக எடுத்துக்கொள்வீர்கள். உங்களைப் பார்த்து சிரிக்காமல் போனால் அதை திமிர் என்று சொல்வீர்.

ஒரு குருடனின் கண்கள் மீது இயேசு கைகளை வைத்துவிட்டு எப்படி பார்க்கிறாய் என்று கேட்கும்போது எல்லாவற்றையும் மரங்களைப் போல பார்க்கிறதாக சொல்கிறான். இரண்டாவது ஒரு முறை இயேசு தொடும்போது எல்லாவற்றையும் தெளிவாக காண்கிறதாக சொன்னான் (மாற்கு 8:23,24). இதைப் போலவே யாரை மன்னிக்காமலிருக்கிறீர்களோ அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் மனுஷனாக அல்ல மிருகமாக அல்லது பிசாசாகத் தான் பார்ப்பீர்கள். உங்களுக்கும் ஆண்டவருடைய இரண்டாவது ஒரு தொடுதல் தேவை.

**2.எதிராளி ஆசீர்வாதமாயிருப்பதை பார்த்து எரிச்சலடைவார்கள்**

யாரை மன்னிக்காமலிருக்கிறீர்களோ அவர்கள் நன்றாக ஆசீர்வாதமாயிருப்பதாக கேள்விப்பட்டால் சந்தோஷப்பட மாட்டீர்கள். மாறாக எரிச்சல் அடைவீர்கள் (நெகே.4:1).

**3.எதிராளி கஷ்டப்படும்போது மகிழ்வார்கள்**

யாரை மன்னிக்காமலிருக்கிறீர்களோ அவர்கள் ஒரு நெருக்கத்தில் இருக்கிறார்கள் என்று கேள்விப்படும்போது களிகூறுவீர்கள். மேன்மை பாராட்டுவீர்கள். சத்துரு விழும்போது சந்தோஷப்பட்டால் கர்த்தர் அதைக் காண்பார். அவர்கள் மீதான ஆண்டவருடைய கோபம் உங்கள் மீது திரும்ப வாய்ப்பிருக்கிறது (நீதி.24:17,18).

பிரதான எதிரியான சவுல் செத்துவிட்டான் என்று கேள்விப்பட்ட தாவீது களிகூறாமல் அழுது புலம்பினான் என்று வேதம் கூறுகிறது (2 சாமு.1:12).

**4. எதிராளியைக் குறித்து புறங்கூறுவார்கள்**

யாரை மன்னிக்காமலிருக்கிறீர்களோ அவர்களைக் குறித்து அவர்களைத் தெரிந்தவர்களை சந்திக்கும்போது குறை கூறுவீர்கள். புறங்கூறுதல் என்பது ஒருவருடைய பெயரைக் கெடுக்கும்படியாக அவர்களைக் குறித்து தவறான தகவல்களை மற்றவர்களிடம் கூறுவது புறங்கூறுகிறவன் மதிகேடன் (நீதி.10:18).

**5. எதிராளியை பழிவாங்கத் துடிப்பார்கள்**

யாரை மன்னியாமலிருக்கிறீர்களோ அவர்களை பழிவாங்கும் நாளுக்காக பதிற்செய்யும் நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள். ஒத்துழைக்காம லிருப்பது, பேசாமலிருப்பது, உதவி செய்யாமலிருப்பது, சந்திக்க மறுப்பது... போன்ற செயல்களில் ஈடுபடுவீர்கள்.

பழிவாங்குதல் ஆண்டவருக்குரியது (ரோமர் 12;19). நீங்கள் போராடி கொண்டிராதிருங்கள். நியாயமாய் தீர்ப்பு செய்கிற ஆண்டவரிடம் ஒப்புக்கொடுங்கள். ஆண்டவர் உங்களுக்காக யுத்தம் செய்வார் (2பேதுரு 2:23).

**6. உள்ளொன்றும் புறம்பொன்றுமாயிருப்பார்கள்** (சங்கீதம் 28:3)

மன்னியாதவர்களை எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தால் சிலர் கண்டுகொள்ளாதது போல போய்விடுவார்கள். சிலரோ கைகொடுத்து சிரித்து பேசுவார்கள். உள்ளத்திலோ எரிச்சலோடு, வேதனையோடு இருப்பார்கள். யுதாஸ்

ஆண்டவரை கட்டியணைத்து முத்தம் கொடுத்து மிகவும் நெருக்கமாக இருப்பதுபோல காட்டிக்கொண்டான். ஆனால் உள்ளத்திலோ துரோகத்தை வைத்திருந்தான்.

**7. எதிராளி செய்த தவறை மறக்கமாட்டார்கள்**

யாரோ செய்த காரியம் அடிக்கடி நினைவில் கொண்டுவந்து வேதனைப்பட்டுக் கொண்டு இருப்பார்கள். மிகுந்த களைப்போடு படுக்கைக்குப் போனாலும் யாரோ சொன்ன வார்த்தை, செய்த துரோகம் ஞாபகம் வந்துவிட்டால் அதை நினைத்து நினைத்து தூங்க மாட்டார்கள். மிகுந்த பசியோடு சாப்பிடப் போனாலும் சாப்பிட ஆரம்பிக்கும்போது யாரோ சொன்ன வார்த்தை, செய்த துரோகம் ஞாபகம் வந்துவிட்டால் அன்று சாப்பாடு இன்பமானதாக இருக்காது.

மனப்பூர்வமாக மன்னித்துவிட மனதில்லாதவர்கள் சொல்லும் வார்த்தைகள் என்னவென்றால், மன்னித்துவிட்டேன். ஆனால் மறக்கத்தான் முடியவில்லை என்பார்கள்.

அன்பானவர்களே மன்னிக்கும் தன்மையுடைய இரண்டுபேர் இணைவதுதான் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை. கணவன் மனைவிக்கிடையே என்ன பிரச்சனை என்றாலும் அன்றே உட்கார்ந்து பேசுங்கள். குறைகள் உணர்த்தப்படும்போது நியாயப்படுத்தாதீர்கள். ஒருவருக்கொருவர் மன்னிப்பு கேளுங்கள். ஒப்புரவாகுங்கள். ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

## FAITH

**FAITH** doesn't always take you out of the problem, it takes you through the problem

**FAITH** doesn't always take away the pain; it gives you the ability to handle the pain

**FAITH** doesn't always take you out of the storm; it calms you in the midst of the storm.

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# விதையுங்கள் (Sowing)

**Rev. பெகின் சாமுவேல்**
(AGCM Director)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த இதழ் மூலமாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நவம்பரில் நடைபெற உள்ள **Bible Champions -21** க்காக உங்கள் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள். இந்த பகுதியின் மூலமாக பெற்றோர்களுக்கு சில ஆலோசனைகளை வேதத்தின் அடிப்படையில் கூற விரும்புகிறேன்.

வேதத்தில் ஓசியா 10:12 ஐ வாசிப்போமானால் 'நீதிக்கென்று விதை விதையுங்கள்' என்று கூறப்பட்டுள்ளது. என்ன விதைப்பது? எப்படி விதைக்க வேண்டும் என்பதை நாம் சற்று தியானிப்போம்.

### நல்ல விதையை விதையுங்கள் (Sowing good seeds)

ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் நல்ல அறுவடையை எதிர்பார்த்தால் அவன் அதற்கு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே நல்ல விதையை விதைப்பது அவசியம். அவன் எதை விதைக்கிறானோ அதைத்தான் அறுப்பான். விதைப்பின் காலம் கடினமானதாகவே இருக்கும். நிலத்தை ஆழ உழுது பண்படுத்த வேண்டும். நல்ல விதைகளை தேர்ந்தெடுக்க வேண்டும். நாம் நமக்கு தேவன் கொடுத்திருக்கிற பிள்ளைகளின் இருதயத்தில் நல்ல விதைகளை விதைக்க தவறினோமானால், சாத்தான் மிக எளிதாக களைகளை விதைத்து விட்டு சென்றுவிடுவான்.

### நல்ல காலத்தில் விதையுங்கள் (Sowing in good time)

சரியான காலத்தில் (நல்ல காலசூழலில்) அவைகளை விதைக்க வேண்டும். சில பெற்றோர்கள் என்னுடைய பிள்ளைக்கு இது படிக்கின்ற காலம், எனவே நன்கு முதிர்ச்சியடைகின்ற காலத்தில் நான் விதைப்பேன் என்றால் அந்த பிள்ளையின் இருதயம் விதைப்புக்கு ஏற்றதாக இருக்காது. உலக வழக்கில் கூறப்படுகிற பழமொழியில், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்று கூறுவார்கள். ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு என்று வேதாகமம் நமக்கு கற்றுத்தருகிறது. எனவே விதைப்புக்கும் ஒரு காலமுண்டு, அந்த நேரத்தில் நாம் விதைத்து விடவேண்டும்.

### நல்ல நிலத்தில் விதையுங்கள் (Sowing in good soil)

விதைப்பதின் முக்கியத்துவத்தை உணர்த்த இயேசு கிறிஸ்து விதைக்கிறவனுடைய உவமையை (The Parable of the Sower) கூறியுள்ளார். அதற்கு விளக்கமும் கொடுத்துள்ளார். பிள்ளைகளுடைய வாழ்வில் பெற்றோர்களாகிய நாம்தான் விதைகளை விதைப்பவர்கள். நம் பிள்ளைகளுடைய இருதயமே நிலம். ஒரு விதையானது எங்கு வேண்டுமானாலும் முளைக்கலாம். ஆனால் அது எவ்வளவு காலம் நிலைக்கும்? எப்படி கனி கொடுக்கும்? என்பதை தீர்மானிப்பது அந்த விதை விதைக்கப்பட்ட இடத்தைப் பொறுத்தது.

நாம் எப்படிப்பட்ட விதைகளை பிள்ளைகளின் இருதயத்தில் விதைக்கிறோம்?

அவர்களுடைய இருதயமாகிய நிலம் எப்படியிருக்கிறது?

பிள்ளைகள் அவர்கள் வாழ்வின் ஆசீர்வாதத்திற்கு தேவையான நல்ல விதைகளையும், அவர்களை அழித்துப்போடக் கூடிய விதைகளையும் பிரித்தறிவதற்கு கற்றுக்கொடுத்திருக்கின்றோமா?

பிள்ளைகளின் இருதயமாகிய நிலத்தை பண்படுத்த என்ன முயற்சி செய்துள்ளோம்? என்பதை சற்று சிந்திப்போம்.

தேவனுடைய வார்த்தையாகிய வேத வார்த்தைகளை விட நாம் விதைக்கவல்ல சிறந்த விதை இந்த உலகில் இல்லை என்பது நாம் அறிந்தது. நான் விதைக்கிற விதை பிள்ளையின் இருதயத்தில் இருக்கிறதா என்று சில நேரங்களில் உங்களுக்கு சந்தேகம் வரலாம் . உங்களை உற்சாகப்படுத்துகிறேன். சோர்ந்து போகாதிருங்கள். நீங்கள் எதிர்பார்த்த கனி ஒருவேளை உடனடியாக பார்க்கமுடியாவிட்டாலும், ஒன்றை அறிந்துகொள்ளுங்கள். விதையானது ஆழ வேரூன்றுவதற்கான காலம் கொஞ்சம் அதிகமாக இருக்கலாம். ஆனால் கனி நிச்சயமாக வெளிப்படும். விதைப்பது மட்டும்தான் நமது வேலை. ஏற்ற நேரத்தில் அதை விளையச் செய்பவர் தேவன் ஒருவரே.

தேவன்தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

# பெற்றோர்களே, எச்சரிக்கை!



நம்மில் அநேகர் கிறிஸ்தவ பெற்றோர்களாய் நமது பொறுப்பில் தவறுவது, வேண்டுமென்றே அப்படி தவறிப் போக தெரிந்து கொள்வதால் அல்ல, அநேக அலுவல்களில் சிக்கிக்கொண்டு அக்கறையற்றவர்களாய் மாறிவிட்டதால் தான், நம்முடைய பிள்ளை வளர்ப்பில் ஏதோ தவறு இருக்கிறது என்று சுட்டிக்காட்டும் எச்சரிக்கைகளை நாம் காணத் தவறியதால் தான்.

## கீழ்க்காணும் பதினெட்டு எச்சரிக்கை குறிப்புகளை திறந்த மனதோடு ஆராய்ந்து பாருங்கள்

1. உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஒருமுறைக்குமேல் சொல்ல வேண்டியிருக்கிறதா (அ) தூங்க செல்வதற்கு (ஆ) சபையில் அமைதியாயிருக்க (இ) அழுகையை நிறத்த (ஈ) ஒரு வேலையை முடிக்க?
2. நீங்களோ அல்லது வேறொரு பெரியவரோ பேசும்போது உடனடியாகவும், மரியாதையுடனும் பதில் கூற உங்கள் பிள்ளை தவறுகிறதா?
3. எப்படியாகிலும் சில சமயங்களில் கீழ்ப்படியாமல் காரியம் சாதித்து விடலாம் என்று உங்கள் பிள்ளை நினைக்கிறதா?

4. “மன்னித்து விடுங்கள் நான் தவறு செய்து விட்டேன்” என்று உங்கள் பிள்ளை சொல்ல நீங்கள் கற்பிக்க தவறி விட்டீர்களா?

5. தன்னுடைய வழியில் செல்ல அனுமதிக்கப்படாத போது பிடிவாதமான, விடாப்பிடியான மௌனத்தில் தனித்துச் செல்வதை தடுக்க தவறி விட்டீர்களா?

6. பிறரது உரிமைகளுக்கும், உடைமைகளுக்கும் மதிப்புக் கொடுக்கும் குணத்தை உங்கள் பிள்ளைகளிடம் உருவாக்க தவறிவிட்டீர்களா?

7. என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் கூறும் போது... உங்கள் பிள்ளை அதை எதிர்த்து வாதாட அனுமதிக்கிறீர்களா?

8. இயல்பாகவே உங்கள் குழந்தை எதற்கெடுத்தாலும் சிணுங்கிக் கொண்டே, குறை கூறிக் கொண்டே இருக்கிறதா?

9. வீட்டில் இருப்பதைக் காட்டிலும் மற்ற எல்லா இடங்களிலும் இருப்பதை உங்கள் பிள்ளை அதிகம் விரும்புகிறதா?

10. நீங்கள் முக்கியமாக கருதுகிற காரியங்களைக் குறித்து உங்கள் பிள்ளை எள்ளி நகையாடுகிறதா?

11. உங்கள் பிள்ளை தன்னுடைய கனவுகளையும், திட்டங்களையும் உங்களிடம் எப்பொழுதாவது பகிர்ந்து கொள்கிறதா, அல்லது ஒருபோதும் அப்படி கலந்துரையாடுவது இல்லையா?

12. வாலிபப் பருவத்தில் உள்ள உங்கள் பிள்ளை உங்களது மதிப்பீடுகளுக்கு அக்கறையற்றவனாய் எல்லா தெரிவுகளையும் தானே செய்கிறானா?

13. உங்கள் பிள்ளைகள், வீட்டிற்கு செய்யும் உதவிகளிலும் வேலைகளிலும் ஏனோதானோ வென்று இருக்கிறார்களா?

14. உலகப் பிரகாரமாக வளர்க்கப்படும் பிள்ளைகள் வீட்டிற்கு வந்து விடும் நேரத்தை காட்டிலும் உங்கள் பிள்ளைகள் தாமதமாக வர அனுமதிக்கிறீர்களா?

15. உங்கள் பிள்ளையின் வார்த்தையை நம்ப முடியவில்லையென்று உணருகிறீர்களா?

16. கிறிஸ்தவ ஐக்கியம் மற்றும் நடவடிக்கைகளைத் தவிர்த்து பிற கிறிஸ்தவரல்லாத நண்பர்கள் மற்றும் சபை சார்பற்ற நடவடிக்கைகளில் உங்கள் பிள்ளை நாட்டங் கொள்கிறானா?

17. வீட்டிற்கு வெளியே எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ள உங்கள் பிள்ளை துணிவு கொள்ளும்போது, ஆசிரியர், போலீஸ் அதிகாரி, முதலாளி ஆகியோர் அவனை தண்டிக்கையில், அவர்கள்தான் உங்கள் பிள்ளையை தவறாக நடத்துகின்றனர் என எண்ணங்கொள்கிறீர்களா?

18. வேதம் கூறும் தகுதியான உடையலங்காரத்திற்கான வரையறைகளை மீறி ஆடைகளைத் தெரிவு செய்ய உங்கள் பிள்ளையை அனுமதிக்கிறீர்களா?

இக்கேள்விகளில் சிலவற்றுக்கு நீங்கள் ‘‘ஆம்’’ என்று பதிலளிக்க வேண்டியிருந்தால், காரியங்களைத் திருத்திக் கொள்ள தேவனிடம் மன்றாடுங்கள்.

## போட்டி எண் : 88 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை** : S.ஜெயா; V.பியூலா; கோகிலா; K.ராஜீ; K.பூங்கோதை; R.மயில்; V.மேகலா; S.முத்துலெட்சுமி; கிரிஜா; K.மகேஸ்வரி; ஜெயசிலின்;T.கலா; M.பிரேமலதா; G.முத்துலெட்சுமி; D.ரோஸ்லின்; தங்கமணி; K.சுபா; புனிதவள்ளி; தமிழ்செல்வி; S.கலா; சுமதி; K.மஞ்சு; A.மேரி; E.கலா; எஸ்தர்; கந்தையா; கனகவல்லி; சந்தியா; S.பிரியா; ராணி பிளசிங்; ராதாமணி; சாராள்; மாரிமுத்து தாவீது; பொம்மி; சித்ரா பிளஸ்சி; A.மாது; குளோரி; A.மஞ்சு; மரகதம்; டோரா; V.விஜி; | **திருநின்றவூர்** : சுமதி; ரோசி; அம்மு; சிவராஜ்; எழிலரசி; ஏடா டாரியா; மார்த்தாள்; கேத்ரின்; சிவானந்தம்; ராஜேஸ்வரி; | **ஸ்ரீ வில்லிபுத்தூர்** : நித்யா; சத்யா; ஜெயராணி; நெல்சன் செல்வராஜ்; புஷ்பா; ஆபிரகாம் ; | **அச்சிறுப்பாக்கம்** : ஜென்ஸி; சுதா; குஷ்பு; கல்பனாதேவி; செல்வகுமாரி; மகாலெஷ்மி; தமிழ்ச்செல்வி; ரேஷ்மா ; | **இறச்சகுளம்** : ஜேஸ்மின்; அமலாவேணி; மோனிஷ்; ஜெஸி; கலா; கனகமணி; நளினாஷாலினி; எஸ்தர்; | **கடையநல்லூர்** : ஸ்டெல்லா; தங்கராஜ்; சாமுவேல்; ஜெபசீதாலெட்சுமி; மேரிகுட்டி; ஆஷா தேவி; | **தேனி** : பூமணி ஜான்சி; திருவியா செல்வி; கிருபா; கார்த்தி கேயாயினி; கிரேஸி; தனம்; ஜீடித் நிம்சி; பிரின்ஸி ; | **ஒட்டப்பிடாரம்** : பானுமதி; இஸ்ரவேல் கிருபாகரன்; நர்மதப்பிரியா; சுப்பிரமணியன்; சரஸ்வதி; | **மதுராந்தகம்** :நேசம்; கிரேஸ் பியூலா; செல்வி; பிரின்ஸி; சுனிதா ரோஸ்லின்; | **ஆறுமுகநேரி** :வெண்ணிலா எஸ்தர்; ஜாய்ஸ்மேரி; கஸ்தூரி; சுகிர்தா; | **சென்னை** : ஜெபராணி; மெர்லின் ஹெலன் பிரிதியா; சந்திராபாய்; | **பெருந்துறை** : ஹெப்சிபா; ஜெனிபர்; கெத்சியாள்; | **பாளையங்கோட்டை** : சாந்தகுமாரி; பிரேமாரூத்; சில்வியா; | **கிருஷ்ணகிரி** : ஆனிமேரி; ஐடா; ரேச்சல் அனுசுயா; | **இராமன்புதூர்** : அனிதா; லீதியாள்; அன்னம்மாள் | **வத்ராப்** : அருள்செல்வி; ஜெபராணி; கல்பனா| **திருச்சி** : கிறிஸ்டி மகாலஷ்மி; சாந்தி;| **மதுரை** : மேரி; கனகவல்லி; | **மடத்துக்குளம்** : சேர்மக்கனி; ஜெனிட்டா ஜூலியட் மேரி; | **அந்தமான்** : ஜேக்லின்; ஸ்டெல்லா மேரி; | **சிவகங்கை** : செபஸ்தி; | **சிதையன்கோட்டை** :சுசிலா கிருபாவதி; | **விளாத்திகுளம்** : கீர்த்தனா; | **வில்லுகுறாரி** : கிருஷ்ணகுமாரி; | **நெய்யூர்** : ஷீலா; | **ஆத்தூர்** : சாம் ஆஸ்பன்; **கும்பகோணம்** : மீனா; **வடக்கு ஆத்தூர்** : ரூத் பாக்யவதி; **விருதுநகர்** : தாயம்மாள்; **குற்றாலம்** : ரூத்; **ஆம்பூர்** : ரூபி; | **தென்னம்பாளையம்** : ரோஸ்லின்சாந்தி; | **திசையன்விளை** : செல்வபாக்கியம்; | **குன்றக்குடி** : மணிமேகலை; | **வல்லம் (த)** : விஜி; | **பழங்காநத்தம்** : சுந்தரி; | **T.N.பாளையம்** : சுஜா; | **கொட்டிவாக்கம்** : அஞ்சலி; செல்வி; | **ஆம்பூர் (திரு)** : கிரிஜா சந்தியா; | **பெரம்பலூர்** : எபினேசர் இம்மானுவேல்; | **திருவள்ளூர்** : ரூத் ; | **நன்னிலம்** : சந்திரமூர்த்தி; | **கொங்கந்தான்பாறை** :சந்திரா ; | **கீழ்வெலூர்** : கிரேனாப்பு ; | **வெள்ளான்குறிச்சி** :ரித்மா; | **ஆத்தூர் முள்ளுவாடி** : செல்வராஜ்; | **திருநெல்வேலி** : இவாஞ்சலின் சாரோன்ரோஸ்; | **ஆழ்வார்திருநகரி** : பனிமலர்; | **மச்சுவாடி** : சாப்நாத்பன்னேயா; | **சாத்தூர்** : கீதா வசந்தகுமாரி; | **புதுக்கோட்டை** : லலிதா; | **கோவில்பட்டி** : வால்டர்சிங்; | **கல்பாக்கம்** : ரோஸி; | **நாகமலை** : விஜிலா; | **இடப்பாடி** : ஜோசப்மேரி; | **பெரியகுளம்** : மனோகாசி; | **தாழையூத்து** : சகுந்தலா; | **கள்ளக்குறிச்சி** : மல்லிகா ; | **கம்பம்**: ஜோதிமணி; | **சிங்கம்புனரி** : ரேவதி; | **விருந்தாசலம்** : S.சுகிர்தா; | **ஆலங்குளம் (வி)** :கிருபா; | **கடாட்சபுரம்** : ரேவதி; | **நாசரேத்** : எஸ்தர்; | **பழையகாயல்** : எலிசபெத்; | **பட்டங்காடு** : மாரிச்செல்வி

---

## போட்டி எண் - 88 (சரியான விடைகள்)

1.தீரு சீதோன்;2.தேவன் நம்மோடு இருக்கிறார்; 3.வயலில்; 4.கனிகளினாலே;5.ஏரோது; 6.எரிசலேம்; 7.லேபேயு; 8.கப்பர்நகூம்; 9.நல்ல விதை. களைகள்; 10.சதுசேயர்; 11.கோராசினே, பெத்சாயிதா; 12.பெத்பகேயு; 13.இஸ்ரவேல்; 14.பரபாஸ்; 15.கர்த்தருடைய தூதனின்; 16.யோசேப்பு; 17.தேவனுடைய; 18. முத்துக்களை; 19.கப்பர்நகூமிலே; 20.சீரியா.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் - 89

### மாற்கு சுவிசேஷம் இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. இடிமுழக்க மக்களென்று அர்த்தம் கொள்ளும் பொவனெர்கேஸ் என்று இவர்களுக்கு பெயரிடப்பட்டது?
2. ஜெப ஆலயத்தலைவரில் ஒருவனாகிய இவன் யார்?
3. எப்பத்தா என்றால் அர்த்தம் என்ன?
4. யார் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்?
5. எது ஒழிந்துபோம்? எது ஒழிந்து போவதில்லை?
6. கபாலஸ்தலம் என்று அர்த்தம் கொள்ளும் --------
7. இது ஒரு காணிக்கை?
8. எந்த மனுஷனும் இதினால் உப்பிடப்படுவான்?
9. ஆவி -------- மாம்சமோ --------
10. மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே -------- தீட்டுப்படுத்தும்.
11. தலித்தாகூமி என்றால் என்ன?
12. காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தவர் யார்?
13. ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த அல்பேயுவின் குமாரன் யார்?
14. நீதியும் பரிசுத்தமும் உள்ளவனென்று யாரைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது?
15. தீமேயுவின் மகன் யார்?
16. முடிவுப்பரியந்தம் நிலை நிற்பவனே --------
17. 4000 பேர் சாப்பிட்டு திருப்தியடைந்து மீதியான துணிக்கைகளை எத்தனை கூடைய நிறைய எடுத்தார்கள்?
18. சேவல் எத்தனை தரம் கூவுகிறதற்கு முன்னே நீ எத்தனை தரம் என்னை மறுதலிப்பாய் என்று இயேசு பேதுருவிடம் சொன்னார்?
19. யாருக்கு இயேசு முதன் முதல் தரிசனமானார்?
20. எங்கிருந்து புறப்பட்டு வருகையில் இயேசுவுக்கு பசி உண்டாயிற்று?

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 10.10.2021

சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள்
தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும்.




**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

தமிழ் பிரதேச சிறுவர் ஊழியம் நடத்தும்

AGCM

# Online BIBLE CHAMPIONS 2021

Tamil & ஆங்கிலம்

பதிவுக் கட்டணம் **Rs. 25** மட்டும்

முதல் பரிசு



இரண்டாம் பரிசு





நாள்

**14-11-2021**
ஞாயிறு 3-4 p.m.

## Portions

| | | |
|---|---|---|
| Group A | Upto 6 years | Judges 1-12 |
| Group B | Age 7-9 | Judges 1-12 |
| Group C | Age 10-13 | Judges 1-21 |
| Group D | Age 14-17 | Judges 1-21 |

பதிவு செய்ய கடைசி நாள் **20.10.21**

- ஆங்கிலத்தில் படிப்பவர்கள் NKJV மொழிபெயர்ப்பை பயன்படுத்தவும்
- மண்டல அளவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் பரிசு
- அதிகமான பிள்ளைகள் பதிவு செய்யும் சபை– சபை போதகருக்கு பரிசு
- அதிகமான பிள்ளைகள் பதிவு செய்யும் மண்டலத்திற்கு பரிசு உண்டு (Presbyter and AGCM பொறுப்பாளர்)

**For more info:**
agcmtn@gmail.com

| Rev. Begin Samuel | Rev. Melvin Manesh | Rev. Daniel Rathnaraj | Rev. Ebenezer | Rev. Raja Selvam |
|---|---|---|---|---|
| +91 99449 52388 | +91 98437 22281 | +91 80566 79025 | +91 98846 99087 | +91 97867 65100 |

Registered News Paper Regd. No. 8206 / 62

# எழுப்புதலின் 10 ஆண்டுகள்

## DECADE OF REVIVAL
## 2021-2030

ஜெபிப்போம்! செயல்படுவோம்! சுதந்தரிப்போம்!

## மெகா வேதவினா போட்டி – 2021



**வேதபகுதி : மீகா, மத்தேயு, மாற்கு**

**நாள் : அக்டோபர் 31, ஞாயிறு**

| 1st Prize | 2nd Prize | 3rd Prize |
|---|---|---|
| Rs. 30,000 Worth | Rs. 20,000 Worth | Rs. 10,000 Worth |

பதிவுக்கட்டணம் : ரூ. 25 மட்டுமே

20 நபர்களுக்கு மேல் பங்குபெறும் தேர்வு எழுதும் எல்லா சபைகளுமே தேர்வு மையங்கள்.

## மண்டல அளவில் நடைபெறும் போட்டிகள்

போட்டிக்கான வேதபகுதி

**மனப்பாட வசனம் : பிரசங்கி**

Memory Verse : Ecclesiastes

**வேதவினா போட்டி : 1 சாமுவேல்**

Bible Quiz : 1 Samuel

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165